பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kālaikathir

விழயல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | புரட்டாதி 11 சனிக்கிழமை 28.09.2019 | கதிர் 327

### இது ரகசியம் அல்ல!

சுமார் கால் நூற்றாண்டு காலம் ஐ.தே.கட்சித் தலைவராக இருந்த பின்னர் – இப்போது கட்சித் தலைவராகவும் பிரதமராகவும் இருந்து கொண்டு – கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் கடைசிவாய்ப்பையும் பறிகொடுத்து, அரசியலில் மிகவும் பக்கம் 02 »

# ஞானசாரதேரரைக் கைது செய்ய உத்தரவிடவேண்டும் ஜனாதிபதி

## மாவை சேனாதிராசா கோரிக்கை



யாழ்ப்பாணம், செப். 28

நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பை ஏற்படுத்தியமைக்காகவும், வழக்கறிஞர், பொதுமக்கள் தாக்கப்பட்டமைக்கு எதிராகவும் ஞானசாரதேரர் உட்பட்ட சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய உத்தரவிடவேண்டுமென ஜனாதிபதியை வற்புறுத்துகின்றோம்.

– இவ்வாறு வலியுறுத்தியிருக்கிறார் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்றஉறுப்பினருமானமாவைசேனாதிராசா.

நீராவியடிப் பிள்ளையார் ஆலய விடயம் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

பௌத்த குரு ஞானசாரதேரரும் மல்வத்த பௌத்த பீடமும் தமிழினத்தையும் இந்துமதம் முதலான ஏனைய மதங்களையும் மதத் தலங்களையும் எச்சரிப்பதையும் ஆக்கிரமிப்பதையும் அடக்கி ஆள முயற்சிப்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ் மக்களும் ஒரு பொழுதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். பௌத்த மதத்திற்கு முன்னுரிமை என்று ஏனைய மதங்களை அடக்கி ஆள, ஒழித்து விட எடுக்கப்படும் முயற்சிகள் அரசமைப்பு ரீதியில் மதங்களின் பக்கம் 03 »

# உறுதிமொழியை எழுத்தில் கொடுப்பவருக்கே ஆதரவு!

## கூட்டமைப்பு இம்முறை தீர்க்கமான முடிவு

கொழும்பு, செப். 29

**ஜனாதிபதி வேட்பாளர் யாராயினும் தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் உறுதிமொழியை எழுத்தில் வழங்குபவருக்கே ஆதரவு அளிக்கப்படும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்க்கமான முடிவொன்றை விரைவில் கூடி எடுக்கவுள்ளது என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.** பக்கம் 02 »

## இலங்கை சிங்கள பௌத்த நாடு ஏற்காவிடின் வெளியேறுங்கள்!

### கொக்கரிக்கிறார் ஞானசார தேரர்



கொழும்பு, செப். 29

இது சிங்கள பௌத்த நாடாகும். இதனை ஏற்றுக் கொண்டவர்கள் மட்டும் இந்த நாட்டில் இருக்கலாம். ஏற்காதவர்கள், தங்களது உடைமைகளுடன் பக்கம் 03 »

## யாழ்ப்பாணம் நீதிமன்றில் கோட்டாபய முன்னிலையாகக் கோரி ஆர்ப்பாட்டம்!




யாழ்ப்பாணம், செப். 28

லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷவை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற வழக்கில் பக்கம் 03 »

## கோட்டாபய யாழ். வந்தால் கவனம் செலுத்தவேண்டும்

### லலித், குகன் வழக்கில் நேற்று சட்டத்தரணி கடும் ஆட்சேபனை

யாழ்ப்பாணம், செப். 28

கோட்டாபய ராஜபக்ஷ, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகப் பாதுகாப்பு இல்லை என்று மேன்முறையீட்டு நீதிமன்றில் இடைக் பக்கம் 03 »

## சம்பள முரண்பாடுகளைத் தீர்க்க அமைச்சரவை உபகுழு நியமனம்

கொழும்பு, செப். 28

ரயில்வே ஊழியர்கள், ஆசிரியர்கள் உட்பட அரசதுறையில் தொழிற்சங்கங்கள் பல சம்பள முரண்பாட்டால் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளநிலையில் அதுதொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சரவை உபகுழுவை ஜனாதிபதி பக்கம் 03 »

## பிக்குகளின் அடாவடிக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்!




யாழ்ப்பாணம், செப். 28

முல்லைத்தீவு – செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய தீர்த்தக்கேணிக்கு அருகில் பௌத்த பிக்குவின் சடலம் தகனம் செய்யப்பட்டமையைக் கண்டித்து வடக்கு மாகாண ஆளுநா அலு பக்கம் 03 »

## சிறிதுங்கவும் கட்டுப்பணம்

கொழும்பு, செப். 28

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரை 8 வேட்பாளர்கள் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர் எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசியல் கட்சிகள் சார்பாக பக்கம் 02 »

## பிரதேச சபை பெண் உறுப்பினரின் வீடு மீது பெற்றோல் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், செப். 28

வலி.தெற்குப்பிரதேச சபையில்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்உறுப்பினர் ரவிக்குமார் யோகாதேவியின் வீடு மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள் பக்கம் 03 »

## ஒக்ரோபர் 1 கட்டுப்பணம் செலுத்துகின்றார் அனுர!

கொழும்பு, செப். 28

வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனுரகுமார திசாநாயக்க எதிர்வரும் முதலாம் திகதியே தேர்தல்கள் செயலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்துவார் எனத் தகவல்கள் பக்கம் 02 »

# குடும்பத் தகராறால் ஏற்பட்ட அவலம்; 4 பிள்ளைகளின் தாயார் பரிதாபச் சாவு

## கணவன் வைத்தியசாலையில்

மன்னார், செப். 28

குடும்பத் தகராறு காரணமாக கணவனை மிரட்டுவதற்காக மண்ணெண்ணெய் ஊற்றி தீப்பெட்டியைப் பற்றவைத்த மனைவி, தீயில் எரிந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார். 4 பிள்ளைகளின் தாயாரான அவருக்கு 6 மாதங்கள் நிரம்பிய கைக்குழந்தையும் உண்டு.

அவரை தீயிலிருந்து காப்பாற்றுவதற்காகக் கட்டியணைத்து எரிகாயங்களுக்கு உள்ளான கணவன் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவத்தில் மன்னார் சிலாவத்துறை – முத்தரிப்புத்துறையைச் சேர்ந்த சுகந்தி ஆசை குறூஸ் (வயது – 32) என்ற தாயாரே உயிரிழந்தார்.

மிகவும் வறுமைப்பட்ட குடும்பத்தில் மனைவி கூலி வேலைக்கு சென்றே பிள்ளைகளை பராமரித்து வந்துள்ளார். ஆனால் கணவன் தினந்தோறும் குடித்துவிட்டு வந்து மனைவியை அடித்து துன்புறுத்தி வந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த 22ஆம் திகதி மதுபோதையில் வீட்டுக்கு வந்த கணவன் மனைவியை அடித்து துன்புறுத்தியுள்ளார். இதன் போது குடும்பப் பெண் மண்ணெண்ணெயை தனது உடலில் ஊற்றி விட்டு மிரட் டியுள்ளார். அதன்போது அவர் தீப்பெட்டியையும் பற்ற வைத்துள்ளார்.

துரதிஷ்டவசமாக தீக்குச்சியிலிருந்த தீ குடும்பப் பெண்ணின் உடலில் பற்றிக்கொண்டது.

மனைவன் தீயில் எரிவதைக் கண்ட கணவன், மனைவியினை கட்டியணைத்து தீயினை அணைக்க முற்பட்டுள்ளார். இருவரும் பலத்த தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் அயலவர்களினால் காப்பாற்றப்பட்டு சிலாவத்துறை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அங்கிருந்து மன்னார் வைத்தியசாலைக்கு இருவரும் மாற்றப்பட்டனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மனைவி உயிரிழந்துள்ளார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கணவன் தொடர்ந்து அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். இறப்பு விசாரணையினை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அலுவலர் நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

# பஸ்ஸில் இருந்து இறங்கிய பெண்ணின் கைப்பையில் திருடிய பெண் சிக்கினார்



வவுனியா, செப். 28

வவுனியா நகரப் பகுதியில் பஸ்ஸில் இருந்து இறங்க முற்பட்ட பெண் ஒருவரின் கைப்பையில் இருந்து பணம் திருடிய பெண் ஒருவர் மடக்கிப் பிடிக்கப் பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

வவுனியா பழைய பஸ் நிலையம் பகுதிக்கு வந்த பஸ் ஒன்றில் இருந்து தாயும், மகனும் இறங்க முற்பட்டவேளை, அந்த பஸ்ஸில் பயணித்த பெண் ஒருவர் பேரூந்தில் இருந்து இறங்க முற்பட்ட தாயின் கைப்பையைத் திறந்து அதில் இருந்த பணத்தை திருடியுள்ளார்.

இதனையடுத்து அந்தத் தாயும், மகனும் பெண்ணைத் துரத்திச் சென்றபோது அவர் அவசர அவசரமாகச் சென்று ஓட்டோ ஒன்றில் தப்பியோட முயன்றுள்ளார்.

இதனையடுத்து அவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார். இதன் போது அவ்விடத்தில் பொலிஸார் வந்ததையடுத்து அந்தப் பெண் திருடியதாக கூறப்பட்ட பணத்தைக் கொடுத்துவிட்டு மன்னிப்பு கோரினார். இதன் பின்னர் எச்சரிக்கப்பட்டு அந்தப் பெண் விடுவிக்கப்பட்டார். (ஐ–100)

## உறுதிமொழியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழமைபோன்று ஜனாதிபதி வேட்பாளர்களால் வழங்கப்படும் வாய்மூல உறுதிமொழிகளை இம்முறை அடியோடு நிராகரிப்பதற்கும் கூட்டமைப்பு திட்டமிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னும் முடிவெடுக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களுடனும் கூட்டமைப்பு பேச்சு நடத்தும் என்றும், தமிழர் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளவர்களுக்கே கூட்டமைப்பு ஆதரவளிக்கும் என்றும், இது தொடர்பில் கூட்டமைப்பு விரைவில் கூடி ஆராயும் என்றும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறியிருந்தார்.

ஜனாதிபதி வேட்பாளருக்கான ஆதரவு தொடர்பில் கூட்டமைப்பு இம்முறை கடும் நிலைப்பாட்டை எடுக்கும் எனத் தெரியவருகின்றது.

அதாவது தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் தமது தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி எழுத்தில் உறுதிமொழி வழங்குபவருக்கே கூட்டமைப்பு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளதாக அறியமுடிந்தது.

இது தொடர்பில் கூட்டமைப்பு விரைவில் கூடி ஆராய்ந்து தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் எனவும் தெரியவருகின்றது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீழ் நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கும்படி கோரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவது, வடக்கு – கிழக்கில் சஜித்தின் பிரசாரத்தை முன்னெடுப்பது போன்ற பொறுப்புகள் ரணிலிடம் இப்போது ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசுடன் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளுக்காகக் கூட்டாக ஒன்றிணைந்து செயற்பட்டிருக்கின்றது தமிழ்க் கூட்டமைப்பு. போதாக்குறைக்கு அரசுக்கு வெளியில் இருந்தபடி, முண்டுகொடுத்து அந்த அரசைக் கவிழ விடாமல் காப்பாற்றி வந்திருக்கிறது – காப்பாற்றி வருகிறது – அது.

ரணில் தரப்புக்கு முண்டு கொடுத்தமைக்காக தமிழர் தரப்பில் சம்பந்தனும், சுமந்திரனும் தினசரி வாங்கிக் கட்டும் வசவுகள் சொல்லி மாளாதவை.

இப்போது ஜனாதிபதி வேட்பாளர் ரணில் இல்லை. சஜித்தான். அவர், தாம் தமிழருக்கு என்ன செய்யப் போகின்றார் என்று வெளிப்படையாக முற்கூட்டியே கூறமாட்டாராம். அது குறித்துப் பகிரங்கமாகப் பேசவும் மாட்டாராம்.

அவருக்காக, தமிழ் மக்களிடம் – தமிழ்க் கூட்டமைப்பிடம் – வக்காலத்து வாங்கும் பொறுப்பு மட்டும் ரணிலிடமாம்!

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் என்பது கூட்டமைப்பின் நிலைப்பாடு. ஆனால், கூட்டமைப்பினரை இந்த மாதம் யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த சஜித், தாம் ஜனாதிபதியானால் மக்களுக்குத் தாம் விரும்பிய சேவைகளை அள்ளி வழங்குவதற்குத் தமக்கு இன்னும் அதிக அதிகாரங்கள் தேவை என்று குறிப்பிட்டாராம்.

அப்படிப்பட்டவருக்கு வக்காலத்து வாங்க கூட்டமைப்பினரிடம் ரணில் வருவார் என்ற தகவலை அறிந்தபோது, எனக்கு சரித்திரம் மீளத் திரும்புகின்றதோ என்ற எண்ணம்தான் வந்தது.

1977 ஜூலையில் பிரதமரானார் ஜே.ஆர். ஜெயவர்த்தனா. 1978 இல் புதிய அரசமைப்பைக் கொண்டு, வந்து நாடாளுமன்றம் மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியானார். 1982 இல் ஜனாதிபதித் தேர்தலில் முதல் தடவையாக நின்று இரண்டாவது பதவிக்காலத்துக்குத் தெரிவானார். அந்தப் பதவிக் காலத்தில் தான் 1987 ஜூலையில் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் அவர் கைச்சாத்திட்டார்.

1988 இறுதியில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல். மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாகும் ஒரு யோசனை ஜே.ஆருக்கு இருந்தது. அச்சமயம் இலங்கைக்கு தனது இராணுவத்தை அமைதி காக்கும் படை என்ற பெயரில் அனுப்பியிருந்தது இந்தியா. ஒரு லட்சத்துக்கும் அதிக இந்தியத் துருப்புகள் வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்திருந்த அந்தக் காலம்.

மூன்றாவது தடவையும் ஜெயவர்த்தனா ஜனாதிபதியாகின்றமையையே இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் விரும்பினார். அப்படி இல்லாவிட்டால், இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் சிற்பிகளில் ஒருவரும், இந்திய சார்புப் போக்குடையவருமான காமினி திஸநாயக்காவை ஜனாதிபதி வேட்பாளராக்க இந்தியத் தரப்பு ஜே.ஆரிடம் பரிந்துரைத்து நின்றது.

ஆனால், இப்போது பிரதமர் ரணிலுக்கு அடுத்த நிலையில் கட்சியில் இருந்துகொண்டு கட்சித் தலைவருக்கு குடைச்சல் கொடுக்கும் சஜித் பிரேமதாஸ போன்று –

அப்போது ஜனாதிபதியும் கட்சித் தலைவருமாக இருந்த ஜெயவர்த்தனாவுக்கு, கட்சியின் அடுத்த நிலையில் இருந்து கொண்டு இதே சஜித் பிரேமதாஸாவின் தந்தை ரணசிங்க பிரேமதாஸா குடைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அந்தக் குடைச்சல் தாங்காது மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எண்ணத்தைக் கைவிட்டு அரசியலில் இருந்தே ஒதுங்கும் முடிவுக்கு நெட்டித் தள்ளப்பட்டார் ஜெயவர்த்தனா.

பிரேமதாஸாவின் குடைச்சலையும் மீறி காமினி திஸநாயக்காவையும் ஜனாதிபதி வேட்பாளராக அவரால் நிறுத்த முடியவில்லை.

இப்போது சஜித்துக்கு ரணில் தலைகுனிந்தமை போல, அப்போது பிரேமதாஸாவுக்கு இடத்தை அளித்து விட்டு ஒதுங்க வேண்டியவரானார் ஜே.ஆர். ஜெயவர்த்தனா.

ஆனால், அப்போது இந்திய அழுத்தத்தைச் சமாளிப்பதற்காக சில வாக்குறுதிகளை இந்தியாவுக்கு வழங்கினார் ஜெயவர்த்தனா.

தாம் பிரேமதாஸாவுடன் விரிவாக உரையாடியுள்ளார் என்றும், தம்மைப்போல இந்திய இணக்கப் போக்கைத் தொடர்ந்து கடைப்பிடிக்க பிரேமதாஸ இணங்கியுள்ளார் என்றும் இந்தியத் தரப்புக்கு உறுதி அளித்தார் ஜெயவர்த்தனா. இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை மதித்துப் போற்றுவார் என்றும், இலங்கையில் உள்ள இந்திய அமைதிப் படைகள் விடயத்தில் பிரேமதாஸா இந்தியாவின் சிரத்தைகளை கவனித்துப் பேணுவார் என்றும், மாகாண சபை முறைமையை மேம்படுத்துவார் என்றும். பிரேமதாஸா சார்பில் உறுதிமொழிகளை இந்தியத் தரப்புக்கு வாரி வழங்கினார் ஜெயவர்த்தனா.

ஆனால் 1988 ஜனாதிபதித் தேர்தலை அடுத்து 1989 முற்பகுதியில் பிரேமதாஸா ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் இந்த வாக்குதிகள் என்னவாயின என்பது நமக்குத் தெரிந்ததுதான்.

ரணசிங்க பிரேமதாஸா ஜனாதிபதியான பின்னர் சுமார் ஏழு ஆண்டுகள் ஜே.ஆர். உயிருடன் இருந்தார் – ஆனால் அரசியலில் வாய் திறக்க முடியாதவராக.

தந்தை ரணசிங்க பிரேமதாஸாவுக்காக இந்தியத் தரப்பிடம் அப்போதைய கட்சித் தலைவர் ஜெயவர்த்தனா பிணை நின்று, உறுதி கூறியமை போல, இப்போது மகன் சஜித் பிரேமதாஸவுக்காகக் கூட்டமைப்பிடம் உறுதி கூற இப்போதைய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வரவிருக்கின்றார்.

தந்தை பிரேமதாஸாவினால் இந்தியா ஏமாந்தமை போல, மகன் பிரேமதாஸாவிடம் கூட்டமைப்பு ஏமாறாமல் இருப்பதாயின் குறைந்தபட்சம் அனைத்து விடயங்களிலும் உறுதிமொழிகளை எழுத்தில் – அதுவும் நேரடியாக சஜித்திடம் – பெற்றுக் கொள்வதில் கூட்டமைப்புத் தலைவர்கள் உறுதியாக இருக்க வேண்டும். அப்படித் தான் இருக்கின்றார்கள் போலத் தெரிகின்றது.

கடந்த நான்கு வருடங்களாக ரணிலின் அரசுடன் ஊடாடியமை மூலம் புதிய அரசமைப்புக்கான நகலுக்குரிய யோசனைத் திட்டம் வரை விடயங்கள் முன்னேறியுள்ளன. அதிலிருந்து பின்வாங்காமல், விடயங்களை முன்கொண்டு சென்று தீர்வைக் காணுவேன் என்ற உறுதி மொழியை கால வரையறையுடன் – இயலுமானால் சர்வதேச மட்டப் பங்காளிப்புடன் – நேரடியாக சஜித்திடமிருந்து பெற்றுக் கொண்டுதான் அவரை ஆதரிப்பது குறித்துக் கூட்டமைப்பு சிந்திக்க வேண்டும்.

சஜித் எழுத்தில் தர மறுத்தால் தேசிய இனப்பிரச்சினைக்கு – கௌரவ வாழ்வுக்கு வழி செய்கின்ற – நீதி, நேர்மையான – தீர்வுக்கும் –

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு விரைந்த தீர்வுக்கும் –

எழுத்து மூல உத்தரவாதத்தை கோட்டாபய ராஜபக்ஷ தருவாராயின் அவர் தரப்புடன் இணங்குகின்றமை குறித்து கூட்டமைப்பு பரிசீலிக்கலாம்.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே?

– மின்னல் –

## சிறிதுங்காவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐவரும், சுயேச்சைக் குழு சார்பாக மூவரும் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர். கடந்த 19 ஆம் திகதி முதல் கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது, ஒக்ரோபர் 6 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை கட்டுப்பணத்தைச் செலுத்த முடியும். ஐக்கிய சோசலிசக் கட்சி சார்பாக சிறிதுங்க ஜயசூரிய நேற்றுக் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரை 8 வேட்பாளர்கள் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர் எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசியல் கட்சிகள் சார்பாக ஐவரும், சுயேச்சைக் குழு சார்பாக மூவரும் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர். கடந்த 19 ஆம் திகதி முதல் கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒக்ர்ோபர் 6 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை கட்டுப்பணத்தை செலுத்த முடியும். ஐக்கிய சோசலிச கட்சி சார்பாக சிறிதுங்க ஜயசூரிய நேற்றுக் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார். (ஐ)

## ஒக்ரோபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கின்றன.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் கீழ் அந்தக் கட்சியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தேர்தலில் களமிறங்குகின்றார்.

கடந்த 19ஆம் திகதி கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தற்போதுவரை 8 வேட்பாளர்கள் மட்டுமே ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

தேர்தல்கள் செயலகத்தின் தகவலின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் 50,000 ரூபாயும் சுயேச்சை வேட்பாளர் 75,000 ரூபாயும் கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற உள்ளது. அதே நேரம் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதி திகதி ஒக்ரோபர் 7 ஆம் திகதி என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஞானசாரதேரரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமத்துவத்தையும் மத நம்பிக்கையையும் பாதுகாக்க வேண்டுமென்பது அவசியமாகிவிட்டது.

இந்திய நாட்டில் பல மதங்கள் பலமொழி இனங்கள், பலவகைப் பிரதேசங்கள் அங்கீகரிக்கப்படுவதை அரசமைப்பினூடாகப் பேணிப் பாதுகாப்பதை உறுதிப்படுத்தி நிற்கின்றது. அதனடிப்படையில் இந்திய அரசியலமைப்பு மதசார்பற்ற நாடு என்றே பிரகடனப்படுத்தியுள்ளது. இலங்கையிலும் எந்த ஒரு மதத்துக்கும் முன்னுரிமை வழங்காமல் பல இனங்களையும், பல மத நம்பிக்கைகளையும் மத பீடங்களையும் கொண்டுள்ள அடிப்படை விதியை ஏற்று மதசார்பற்ற அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும்.

தொடர்ச்சியாகவும் அண்மையிலும் ஞானசார தேரர் மத விரோத, இன விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதை ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றம் ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. ஜனாதிபதி ஞானசார தேரரை மன்னிப்பளித்து விடுதலை செய்தமை மீண்டுமொருமுறை அரசியல் தவறிழைத்தமையையே நிரூபித்துள்ளது.

முல்லைத்தீவு செம்மலைப் பிரதேசத்தில் நிராவியடிப் பிள்ளையார் கோவில் எல்லைக்குள் அத்துமீறி, ஆக்கிரமித்து பௌத்த விகாரையைக் கட்டியிருந்த புத்த குரு புற்றுநோயால் கொழும்பு மருத்தவமனையில் இறந்துவிட்டார். ஆனால் அந்தப் புத்த குருவின் உடலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளவில் எரிக்க ஞானசாரதேரரும் ஏனைய பௌத்த மத தீவிரவாதிகளும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அந்த வளவில் பௌத்த விகாரை கட்டப்பட்டமை தொடர்பில் நீதிமன்ற வழக்கு நடைபெறுகிறது. மரணமடைந்த பிக்குவின் உடலை இந்து ஆலய வளவில் எரிப்பதற்கு எதிரான வழக்கு முல்லை நீதிமன்றில் விசாரணையில் இருந்த வேளை அந்தத் தீர்ப்பு நடைமுறைகளை மீறி ஞானசார தேரரின் வழிநடத்தலில் பொலிஸார் பாதுகாத்து நிற்க தேரரின் உடல் எரிக்கப்பட்டுள்ளமை நீதிக்கு விரோதமானதேயாகும். நீதிமன்ற அவமதிப்பாகும்.

அந்த நீதிமன்றம் நந்திக்கடல் நீரேரிக்கருகாமையில் பௌத்த தேரரை எரிப்பதற்குத் தீர்ப்பு வழங்கும் வேளையில் அத்தீர்ப்பு அறிவிப்பை மீறி நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளவருகில் தேரர் உடல் எரிக்கப்பட்டது. நீதிமன்ற அவமதிப்பு மட்டுமல்ல இந்து மக்கள் தமிழ் மக்களுக்கு மத நம்பிக்கைகளுக்கு எதிரானதேயாகும். நீதிமன்றத் தீர்ப்போடு வந்த வழக்கறிஞர்களும் அவமதிக்கப்பட்டுள்ளனர், தாக்கப்பட்டுள்ளனர். ஒட்டுமொத்தமாக இவை தொடர்பிலான அனைத்து ஜனநாயகப்; போராட்டங்களையும் ஆதரிக்கவேண்டும்.

எனவே நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பை ஏற்படுத்தியமைக்காகவும், வழக்கறிஞர், பொதுமக்கள் தாக்கப்பட்டமைக்கு எதிராகவும் ஞானசார தேரர் உட்பட்ட சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய உத்தரவிட வேண்டுமென ஜனாதிபதியை வற்புறுத்துகின்றோம்.

மல்வத்த பௌத்த பீடம் உள்ளிட்ட இனமத விரோத நடவடிக்கைகள் நீதிமன்ற அவமதிப்பு மற்றும் குறிப்பாக இந்துமத ஆலய ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் ஜனாதிபதியே வழக்கைப் பதிவு செய்து நீதியை நிலைநாட்டவும் நாட்டைப் பாதுகாக்கவும் வேண்டுமென்றும் வற்புறுத்துகின்றோம். அல்லது மத ரீதியாக, இன ரீதியாக, பிரதேச ரீதியாக இலங்கை பிளவுபட்டுவிடும் விளைவுகளுக்கு ஜனாதிபதியும் அரசுமே பொறுப்பாகிவிடுமெனவும்; கூறி வைக்கின்றோம் – என்றுள்ளது. (ஐ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாராளமாக வேறு நாடுகளுக்குச் செல்லாம் என பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கண்டியில் ரத்ன தேரர், உண்ணாவிரதமிருந்தபோது, கிழக்கு மற்றும் மேல்மாகாண ஆளுநர்கள் மற்றும் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டால், நாட்டில் பெரும் பிரச்சினை ஏற்படும் என்று நான் கூறியிருந்தேன். இதுதொடர்பாக வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ளவே நான் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவால் அழைக்கப்பட்டுள்ளேன்

நான் இங்கு ஒரு கேள்வி எழுப்புகிறேன். இந்த நாடு யாருடையது? இந்த நாட்டின் உத்தியோகபூர்வ மொழி எது? இந்த நாடு 2500 வருடங்களுக்கு முன்னரும் இருந்தது. இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் மதங்கள் தோற்றம் பெறும் முன்னரே, இந்த நாடு இருந்தது. இந்தக் கலாசாரத்தை நாம்தான் தற்போதுவரை கொண்டு வந்துள்ளோம். ஆனால், எமக்கு இப்போது சிங்களம் பேச முடியாதுள்ளது.

தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சிங்களம் தெரியாதமையால், எமக்கும், எமது மொழியைப் பேச முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக நாம் மிகவும் கவலையடைகிறோம். இதனை தமிழர்களும், முஸ்லிம்களும் உணர்ந்து கொள்ளவேண்டும். இந்த நாட்டில் வாழ வேண்டுமெனில், முதலில் சிங்கள மொழியை கற்றுக்கொள்ளுங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நாட்டின் தலைவராக வருபவர், தேசிய பாதுகாப்பை பலப்படுத்தும் நபராக இருக்கவேண்டும் என்பதோடு, தெற்கிலுள்ள சட்டத் திட்டங்களை வடக்கு –கிழக்கிலும் நடைமுறைப் படுத்தக்கூடிய ஒருவராகவும், வடக்கும் கிழக்கும் இலங்கையின் பகுதி என்பதை நிரூபிக்கும் ஒருவராகவும் இருத்தல் அவசியமாக இருக்கிறது. இதன் ஊடாக மட்டுமே இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும். இந்த நாட்டில் அனைவருக்கும் ஒரு சட்டம் தான் இருக்க வேண்டும்.

இவ்வாறான ஒருவர் தான் நாட்டுக்கு தலைமையேற்க வேண்டும். நாம் அண்மையில் முல்லைத்தீவுக்குச் சென்றிருந்த போது, எமக்கு தமிழ் நாட்டுக்குச் சென்ற ஓர் உணர்வு ஏற்பட்டது.

வடக்கு ஒன்றும் தமிழ் நாட்டின் ஒரு பகுதி அல்ல. அங்கும் எமது நாட்டின் சட்டத்திட்டங்கள் செல்லுபடியாகும். அங்கு, அரசமைப்பு மதிக்கப்படவில்லை. இதனால், அங்கு எம்மால் நீதியை எதிர்ப்பார்க்க முடியாது.

இவற்றையெல்லாம் மாற்றியமைக்கும் ஒரு தலைவர் வர வேண்டும். இதனை நாம் இப்படியே விட்டுவிட்டால், எதிர்க்காலத்தில் பாரிய பிரச்சினைகளுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியேற்படும். இது சிங்கள பௌத்த நாடாகும். இதனை ஏற்றுக் கொண்டவர்கள் மட்டும் இந்த நாட்டில் இருக்கலாம். ஏற்காதவர்கள், தங்களது உடமைகளுடன் தாராளமாக வேறு நாடுகளுக்குச் செல்லாம் – என்றார். (ஐ)

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலையாகி உண்மைத் தன்மையை வெளிப்படுத்தக் கோரி நேற்று யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முன்னிலை சோசலிசக் கட்சியின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்தக் கட்சியின் செயற்பாட்டாளர்களான லலித் மற்றும் குகன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டு 8 வருடங்கள் கடந்த நிலையில் அவர்களை வெளிப்படுத்துமாறு இந்த ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

கோட்டாபய பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலப் பகுதியில் 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்ப்பாண நகரில் நடைபெறவிருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்காலில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டனர்.

இது தொடர்பிலான மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு எழுத்தாணை மீதான ஆரம்ப விசாரணை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வருகிறது.

இதில் முன்னிலையாகுமாறு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபயவுக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றினால் அழைப்பாணை விடுக்கப்பட்டபோதும் பாதுகாப்பைக் காரணம்காட்டி அவர் முன்னிலையாகாமலிருக்க அவரது தரப்பால் மேன்முறையீட்டு நீதிமன்றில் இடைக்காலத் தடைக் கட்டளை பெறப்பட்டது.

எனவே கோட்டாபய ராஜபக்ஷவை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற வழக்கில் முன்னிலையாகி உண்மைத்தன்மையை வெளிப்படுத்தக் கோரி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (ஐ-07)

## சம்பள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.

ரயில்வே ஊழியர்கள் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கும் நிலையில் அவரச அமைச்சரவைக் கூட்டத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று மாலை 6 மணிக்கு கூட்டினார்.

அதன்போதே அரச துறை ஊழியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சரவை உப குழுவை ஜனாதிபதி நியமித்தார்.

அமைச்சர்கள் மங்கள சமரவீர, வஜிர அபயவர்த்தன, ராஜித சேனரத்ன, ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் அசோக் அபயசிங்க ஆகிய ஐவர் கொண்ட அமைச்சரவை உப குழுவே ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு மிக விரைவாக ஆராய்ந்து சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு காணும் வகையில் அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அரச துறை ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கும் சிறப்பு ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்திருந்தார். அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் 3 ஆயிரம் ரூபா தொடக்கம் 24 ஆயிரம் ரூபா வரை சம்பள அதிகரிப்பு வரும் ஜனவரி முதல் வழங்கப்படும் என்று நிதி அமைச்சு அறிவித்திருந்தது.

இந்த நிலையில் மீளவும் முதலில் இருந்து ஆராய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவை உப குழுவை நியமித்துள்ளார். (ஐ)

## கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலக் கட்டளை பெற்றுள்ளார். அவர் இனி ஒரு சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தால் அது தொடர்பில் கவனம் செலுத்துவதற்கான உரிமையைத் தக்கவைத்துக்கொள்ள அனுமதியளிக்கவேண்டும். அவரது சாட்சியம் லலித், குகன் வழக்கில் முக்கியமானது

இவ்வாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான ஆட்கொணர்வு மனு மீதான விசாரணையில் மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி விண்ணப்பம் செய்தார்.

எனினும் அந்த விண்ணப்பத்தை நிராகரித்த மன்று, வழக்கின் அடுத்த சாட்சியாக டயலொக் நிறுவனத்தின் பிரதிநிதியை மன்றில் முன்னலையாகுமாறு உத்தரவிட்டதுடன், வழக்கை எதிர்வரும் ஒக்ரோபர் 31 வரை ஒத்திவைத்தது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களான லலித் மற்றும் குகன் ஆகியோரின் ஆட்கொணர்வு மனு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது சாட்சியம் வழங்குவதற்காக அழைக்கப்பட்ட முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ, மன்றில் முன்னிலையாகவில்லை. அவர் சார்பில் சட்டத்தரணி அமரசிங்க முற்பட்டார்.

சாட்சிக்கு வழங்கப்பட்ட அழைப்புக் கட்டளைக்கு இடைக்காலத் தடை வழங்கி மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலக் கட்டளை வழங்கியுள்ளது என்று குறிப்பிட்டு அந்தக் கட்டளையின் சான்றுப்படுத்திய பிரதியை மன்றில் முன்வைத்தார்.

லலித், குகன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் சாட்சியம் மிகமுக்கியமானது. எனினும் அவர் இந்த மன்றில் முன்னிலையாவார் என்று கடந்த இரண்டு தவணைகளில் அவரது சட்டத்தரணிகள் உறுதியளித்துள்ளனர்.

தற்போது அவர் இந்த மன்றில் முன்னிலையாவதற்கு பாதுகாப்பு இல்லை என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் சென்று கட்டளை பெற்றுள்ளார். இது தொடர்பில் மனுதாரர்களான எமக்கோ, இந்த மன்றுக்கோ தெரியப்படுத்தப்படவில்லை.

அவர் ஜனாதிபதி வேட்பாளராகவோ, ஜனாதிபதியாகவோ இருந்தால்கூட இந்த மன்றின் கட்டளைக்கு மதிப்பளிக்கவேண்டும்.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாவதற்கு அவருக்குப் பாதுகாப்பு இல்லாவிடின் மன்றிடம் விண்ணப்பம் செய்து மேலதிக பாதுகாப்பைப் பெற்றுக்கொண்டிருக்க முடியும்.

இனிஎந்தவொரு தேவைக்காகவும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தால் அது தொடர்பில் கவனம் செலுத்துவதற்கான உரிமையைத் தக்கவைத்துக்கொள்ள அனுமதியளிக்கவேண்டும் என்று மனுதாரர்களது சட்டத்தரணி கூறினார்.

மேன்முறையீட்டு நீதிமன்றின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய கடப்பாடு கீழ் நீதிமன்றங்களுக்கு உண்டு. அதனால் மனுதாரர்களது விண்ணப்பத்துக்கு இந்த மன்றினால் கட்டளை ஆக்க முடியாது.

அதனால் இந்தச் சாட்சியிடம் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ சாட்சியம் பெறுவதை மேன்முறையீட்டு நீதிமன்றின் இறுதிக் கட்டளை கிடைக்கும் வரை ஒத்திவைக்கிறது.

மேன்முறையீட்டு நீதிமன்றின் கட்டளை தொடர்பில் சாட்சியின் (கோட்டாபயவின்) சட்டத்தரணி மன்றுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

அடுத்த சாட்சியை அழைக்க மன்று கட்டளையிடுகிறது. அதன்படி டயலொக் நிறுவனத்தால் வழங்கப்பட்ட தரவுகள் தொடர்பில் விளக்கமளிக்க அந்த நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் முன்னிலையாகுமாறு அழைப்புக் கட்டளை பிறப்பிக்கப்படுகிறது என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

அத்துடன் வழக்கு விசாரணையை வரும் ஒக்ரோபர் 31ஆம் திகதிவரை ஒத்திவைத்து மன்று உத்தரவிட்டது. (ஐ)

## பிக்குகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலகம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு–கிழக்கு சிவில் அமைப்புக்களும் பொதுமக்களும் இணைந்து நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தியிருந்தனா.

இதன்போது 'அரசே இன அடக்குமுறையை நிறுத்து', 'அரசே இனங்களுக்கிடையில் பாரபட்சம் காட்டாதே' 'நீதி ஆழ்கிறதா? அநீதி ஆழ்கிறதா?' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியவாறு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனா.

இதன்போது நீதிமன்ற தீர்ப்பை மீறியவாகள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் வலியுறுத்தியிருந்தனா.

போராட்டத்தின் தொடாச்சியாக நல்லூர் ஆலயச் சுற்றாடலில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

## பிரதேச சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளப்பட்டதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவத்தில் வீட்டு முற்றத்திலிருந்து உரையாடிக் கொண்டிருந்த பிரதேச சபை உறுப்பினர் மற்றும் அவர்களது உறவினர்கள் தெய்வாதீனமாகப் பாதிப்புகளின்றித் தப்பித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் உடுவில் கந்தேரோடை பகுதியில் நேற்று இரவு 8.25 மணியளவில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் வீட்டு வாயில் படலைக்குள் வந்து 3 பெற்றோல் குண்டுகளை வீசிவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.

தானும் வெளிநாட்டிலிருந்து வந்த தனது மகள், குழந்தைகள் என அனைவரும் வீட்டு முற்றத்திலிருந்து உரையாடிக் கொண்டிருந்தபோது சம்பவம் இடம்பெற்றதாகக் குறிப்பிட்ட அவர், தெய்வாதீனமாக எந்தப் பாதிப்புகளுமின்றி தாம் தப்பித்தாகக் கூறினார்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வலி.தெற்கு பிரதேச சபையில் புளொட் கட்சி சார்பில் போட்டியிட்ட ரவிக்குமார் யோகாதேவி, உடுவில் கந்தரோடை வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

# இரு தளத்தில் பேசுங்கள்!

பிரதான கட்சிகளின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகின்றவர்கள் யார், யார் என்பது ஓரளவு நிச்சயமாகிவிட்டது.

பொதுஜன பெரமுன சார்பில் கோட்டாபய ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் சஜித் பிரேமதாஸா, ஜே.வி.பி சார்பில் அனுரகுமார திஸாநாயக்க. இவர்கள்தான் பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள். இவர்களுள் ஒருவர்தான் நாட்டின் அடுத்த ஜனாதிபதி.

பெரும்பாலும் கோட்டாபயவுக்கும், சஜித்துக்கும் இடையில்தான் நேரடிப் போட்டி.

இந்த இருவரில் யாரை ஆதரிப்பது அல்லது தேர்தலைப் பகிஷ்கரிப்பதா என்பதுதான் இன்றைய நிலையில் தமிழ் மக்கள் முன்னால் இருக்கும் பிரதான கேள்வி.

இது விடயத்தில் தமிழர்களின் அரசியல் தலைமைகள் அவர்களை எப்படி வழி நடத்தப் போகின்றன என்பதே இப்போது விடயம்.

தமிழர்களைப் பொறுத்தவரை கோட்டாபய ராஜபக்ஷ தெரிந்த பிசாசு. சஜித் பிரேமதாஸா தெரியாத தேவதை.

*'தெரியாத தேவதையை விட தெரிந்த பிசாசு மேல்'* என்ற பழமொழிக்கு ஒப்ப கோட்டாவை ஆதரிப்பதா?

அல்லது அண்மைக்காலமாகத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி சார்புப் போக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்பற்றி வருகின்றமையால் அதன் வழியில் சஜித்தை ஆதரிப்பதா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூட இதுவிடயத்தில் ஒரு முடிவை இன்னும் எடுக்கவில்லை.

"தேர்தலில் போட்டியிடக் கூடிய அனைத்து வேட்பாளர்களுடனும் நாம் பேசுவோம். அதற்கான கதவுகளை நாம் திறந்தே வைத்திருக்கின்றோம். தமிழர்களுக்கு நீதியான தீர்வை வழங்கக் கூடிய உறுதியைத் தரக் கூடியவர்கள் யாரோ அவருக்கு நாம் ஆதரவளிப்போம்!" என்ற சாரப்படக் கூட்டமைப்புத் தலைமை கோடி காட்டியுள்ளது.

நல்ல விடயம்தான். சட்டப்படி பார்த்தால் வேட்பாளர்கள் யார், யார் என்பது இன்னும் இறுதியாகவில்லை. எதிர்வரும் ஏழாம் திகதி வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்புதான் அது இறுதியாகும்.

கோட்டாபயவின் வேட்புமனு விவகாரம் கூட இறுதி நேரத்தில் மாறிவிடலாம் என்ற சந்தேகம் சில தரப்புகளில் இன்னும் உண்டு.

அதனால், வேட்பு மனுத்தாக்கலான பின்னரே வேட்பாளர்கள் யார், யார் என்பது சட்டப்படி உறுதியான பின்பே கூட்டமைப்பின் தீர்மானம் வரும் என எதிர்பார்க்கலாம்.

ஆனால், 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது தபால் மூல வாக்களிப்பு முடிவுற்ற பின்னர்தான் கூட்டமைப்பின் அரசியல் தீர்மானம் வெளிவந்தது. அப்படிப் பிந்தாமல் இம்முறை தனது முடிவை கூட்டமைப்பு நேரத்துடன் அறிவிக்க வேண்டும்.

*"தீர்வுக்கு உத்தரவாதமளிக்கும் வேட்பாளருக்கே நாம் ஆதரவு"* – என்று சம்பந்தன் கூறியிருக்கின்றமை சகல தரப்புகளுடன் பேசத் தாங்கள் தயார் என்பதற்கான நல்லதோர் சமிக்ஞை.

தமிழர் தரப்பில் இருந்து மோசமான யுத்தக் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷ நீதி, நியாயமான – ஏற்றுக் கொள்ளத்தக்க – தீர்வு ஒன்றை முன்வைத்து உத்தரவாதமளிப்பாராயின், அவரையும் கூட கூட்டமைப்பு ஆதரிக்கும் என்பதே இக்கூற்றின் பொருள்.

அதாவது, உணர்ச்சி அரசியலில் இருந்து யதார்த்த அரசியலுக்குள் கூட்டமைப்பு நுழையத் தயார் என்பதே இக்கூற்றின் உட்பொருள்.

இதுவரை காலமும் கூட்டமைப்புடன் இணைந்து சமரச முயற்சியில் ஈடுபட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்படுபவர் சஜித் பிரேமதாஸா.

அவர் அக்கட்சியின் பிரதித் தலைவர் எனினும், தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்று வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி எடுத்த எந்த நடவடிக்கையிலும் – எப்போதும்– ஈடுபட்டவரல்லர். இப்போதும் கூட இது விடயத்தில் பிடி கொடுக்காமல் பேசி நழுவி விடுபவராகவே உள்ளார். *'ஆறு மாதத்துக்குள் உச்சப்பட்ச அதிகாரப் பகிர்வு'* என்று மோலோட்டமாகப் பூசி மெழுகுகின்றாரே தவிர, இதுதான் உச்சப்பட்ச அதிகாரப் பகிர்வு என்று கூறும் திராணி அவருக்கு இல்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு தமிழர்களுடன் கடந்த நான்கு வருடங்களாகப் பேசி முன்னெடுத்த சமரச முயற்சிகளின் – சமாதான எத்தனங்களின் – பெறுபேறுகளை அதிலிருந்து தொடர்வேன் என்று கூறும் *'அரசியல் தைரியம்'* கூட அவரிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

அத்தகையவருடன் கண்ணை மூடிக் கொண்டு அணி சேர்வதை விட, எல்லாத் தரப்புகளுடனும் பேசுவோம், நியாயமான தீர்வுக்கு உத்தரவாதமளிக்கும் தரப்பை ஆதரிப்போம் என்ற நிலைப்பாட்டைக் கூட்டமைப்பு எடுத்து நிற்பது நியாயமானதே.

தமிழ்க் கூட்டமைப்பு எந்த முடிவை எடுத்தாலும், அது பிற தமிழ்த் தரப்புகளையும் ஒன்றிணைத்துத் தமிழரின் ஐக்கியப்பட்ட முடிவாக இருப்பின் அது சிறப்பானதாக அமையும்.

ஆகவே, இவ்விடயத்தில் ஒருபுறம் வேட்பாளர்களுடன் பேசும் அதேசமயம், தமிழர் தரப்புக்கள் தங்களுக்குள்ளும் பேச வேண்டும். செய்வார்களா?

# திங்கள் முடிவெடுக்கின்றது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி!

## வீரகுமார திஸாநாயக்க அறிவிப்பு



கொழும்பு, செப். 28

ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுஜன பெரமுனவுடனான பேச்சு என்பன குறித்து எதிர்வரும் 30 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் தீர்க்கமான முடிவு எட்டப்படும் என்று அந்தக் கட்சியின் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சுதந்திர கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது ஜனாதிபதித் தேர்தல் குறித்து அரசியலில் பரபரப்பான நிலைவரமே காணப்படுகிறது. அத்தோடு சுதந்திரக் கட்சியின் தீர்மானம் என்ன என்பது அனைவரதும் எதிர்பார்ப்புக்குள்ளாகியுள்ளது. எனவே தான் எதிர்வரும் திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் கட்சியின் மத்திய குழுவை கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் போது சுதந்திரக் கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படும் என எதிர்பார்க்கின்றோம். நாம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையே மீண்டும் வேட்பாளராகக் களமிறங்குமாறு கோரியிருக்கின்றோம். அதே வேளை இறுதியாக இடம்பெற்ற மத்திய குழு கூட்டத்தின் போது சுதந்திரக் கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட வேண்டும் என்றும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது – என்றார். (ஐ)

# வேந்தனார் நூற்றாண்டு விழா இன்று மாலை நல்லூரில் நிகழ்வு



யாழ்ப்பாணம், செப்.28

ஈழத்தமிழ்ப்பேரறிஞர் வித்துவான் வேந்தனார் அவர்களின் நூற்றாண்டுவிழா இன்று சனிக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள துர்க்கா மணிமண்டபத்தில், மாலை 4மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடைபெற உள்ளது.

வித்துவான் வேந்தனார் ஈழத் தமிழ் இலக்கியவுலகில் , 1940 –1966 ஆண்டுக் காலப் பகுதியில் , முன்னணி இலக்கியவாதியாக விளங்கியவர்.

தலை சிறந்த குழந்தைப்பாடலாசிரியர், தனிச் சிறப்புமிக்க பாடநூல் உரையாசிரியர், கவிஞர், கட்டுரையாசிரியர், சித்தாந்த தத்துவங்களை நன்கறிந்த சித்தாந்த சிரோமணி, பெயர் பெற்ற மேடைப் பேச்சாளர், போற்றதலிற்குரிய தமிழாசான், தமிழின உரிமைக்காக 1942 ஆம் ஆண்டிலிருந்து 1966 அவர் இறக்கும் வரை கவிதை, கட்டுரை, சொற்பொழிவு என்பவற்றால், குரல் கொடுத்த தமிழ்ப் பேரன்பர் எனப் பல கோணங்களில் நினைவு கூரப்பட வேண்டியவர் வித்துவான் வேந்தனார்.

இன்று உலகெங்கும் அவர் நூற்றாண்டு விழாவும் , நூல்கள் வெளியீட்டு விழாவும் நடத்தப்படுகின்றன.

அந்த வகையில் இவ் விழாக்கள் இலண்டன், பாரிஸ்,ரொரன்றோ,கொழும்பு ஆகிய இடங்ளில் நடத்தப்பட்டுள்ளன.

மேலும் ஜேர்மனி, நெதர்லாந்து, இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய இடங்களிலும் நடத்தப்படவுள்ளன.

அந்தவகையில் இந்த நூற்றாண்டுவிழா இன்று யாழ்ப்பாணம் நல்லூரடியில், துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் அனைத்துத் தமிழ் மக்களும் கலந்து கொண்டு, ஈழம் தந்த இணையற்ற தமிழ்ப் பேரறிஞரின் நினைவைப் போற்றுவோம்.

தனது தந்தையாரின் எழுத்துக்களைத் தேடித் தேடி எடுத்து, நூல்களாக அச்சிட்டு, இந்த விழாக்களை இன்று உலகெங்கும் நடத்துபவர், வேந்தனாரின் இளைய மகனும், கடந்த 36 வருடங்களாகப் புலம் பெயர்ந்து இலண்டனில் வாழ்ந்து வருபவருமான வேந்தனார் இளஞ்சேய் (கணக்காளர்) ஆவார்.

# ஊடகவியலாளரிடம் 3 மணிநேரம் விசாரணை

முல்லைத்தீவு, செப். 28

முல்லைத்தீவு ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் நேற்றுமுன்தினம் கொழும்பில் பயங்கரவாத தடுப்புப் பிரிவில், 3 மணி நேரத்துக்கு மேலாக விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர் சண்முகம் தவசீலனுக்கு விசாரணைக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

இந்த கடிதத்திற்கு அமைய நேற்றுமுன்தினம் காலை 10.00 மணிக்கு கொழும்பு 01 இல் அமைந்துள்ள ரி.ஐ.டி. தலைமை அலுவலகத்திற்கு தனது சட்டத்தரணியுடன் ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் சமுகமளித்திருந்தார்.

இதன் போது முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கடற்கரையில் கப்பலடி பகுதியில் வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் மே மாதம் 12 ஆம் திகதி இடம் பெற்றிருந்த தமிழின படுகொலை நினைவு வாரத்தின் ஆரம்ப நிகழ்வு தொடர்பில் வினவப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு தொடர்பாக களத்தில் செய்தி சேகரிக்கச் சென்றவர் என்ற ரீதியில் இந்த நிகழ்வு தொடர்பாக வினவிய பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் நிகழ்வில் சிங்கள மொழியில் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால் ஊடகங்களுக்கு வழங்கப்பட்ட கருத்து தொடர்பாகவும் வினவியுள்ளனர்.

தமிழ் மற்றும் சிங்கள அதிகாரிகள் இருவர் சுமார் மூன்று மணித்தியாலங்கள் தன்னிடம் விசாரணை மேற்கொண்டனர் எனவும் ஊடகவியலாளர் தவசீலன் தெரிவித்துள்ளார். (ஐ)

**நாளை** 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம்: பூரம் பி.இ 1.00 வரை
திதி : சதுர்த்தசி பி. இ 3.05 வரை
இராகுகாலம் : 10.32 – 12.02
சுப நேரம் : 6.02 – 7.32



# ஐ.தே.கவின் பலத்தை காட்டும் பேரணி ஒக். 10

## அமைச்சர் அகிலவிராஜ் அறிவிப்பு

கொழும்பு, செப். 28

ஐக்கிய தேசியக் கட்சியினர் கட்சியின் மாநாட்டை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதியும் தமது மக்கள் பலத்தை நிரூபிக்கும் கூட்டத்தை 10 ஆம் திகதியும் நடத்தவுள்ளனர் என கட்சியின் செயலாளரும் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்பட்ட பின்னர் சிறிகொத்தாவில் இடம்பெற்ற விசேட ஊடவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் குறித்த தீர்மானம் எடுக்க ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற குழுவும் பிரதமர் தலைமையில் கூடி இணக்கம் கண்டது.

இதன்போது தேர்தல் முறைமையில் மாற்றங்களை கொண்டுவருவது மற்றும் பிரதமரின் இணக்கப்பாட்டுக்கு அமைய நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாது ஒழித்தல் உள்ளிட்ட எமது அரசாங்கம் இணக்கம் தெரிவித்த அரசமைப்பில் அமைப்பு முறைமையை உருவாக்குதல் முதல்கொண்டு அனைத்தையும் நிறைவேற்றுவது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. இவை தெரிவுக்குழுவிலும் நாடாளுமன்ற குழுவிலும் ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டன.

அத்துடன் பிரதமர் மற்றும் கட்சியின் தலைமைப்பதவி ரணில் விக்கிரமசிங்கவிடம் தொடர்ந்தும் இருக்கும். இதற்கும் அனைவரும் இணைக்கம் தெரிவித்தனர்.

எமது ஜனாதிபதி – எமது பிரதமரின் தலைமையில் ஆட்சியை உருவாக்க சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

அத்துடன் நாம் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய தேசிய முன்னணியாக இணைந்து பரந்த கூட்டணியாக தேர்தலில் களமிறங்கவுள்ளோம். இதுவரை எம்முடன் இணையாத கட்சிகளையும் இணைத்துக்கொண்டு பரந்த கூட்டணியாக வெற்றியை பெற்றுக்கொள்ளவே தீர்மானம் எடுப்போம் என்றார். (ஐ)




நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் கல்லூரி அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில சிறப்பாக இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் வலயக் கல்வி பணிப்பாளர் செ. சந்திராஜா கலந்து கொண்டார். வலய மட்ட, மாகாண மட்ட, தேசிய மட்ட போட்டிகளில் பங்குபற்றி சாதனை புரிந்த சாதனையாளர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். இதன் போது மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# யாழ். பஸ் நிலையம் முன் போராட்டம்

யாழ்ப்பாணம், செப்.28

உயிர் வாழ்வதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக உறுதிப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி யாழ் மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் உயிர் வாழ்வதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக உறுதிப்படுத்துக எனும் தொனிப்பொருளில் பல மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படுகின்றதன் தொடராகவே யாழிலும் இப் போராட்டம் நடத்தப்பட்டது.

யாழ் மத்திய பஸ் முன்பாக நடைபெற்ற இப் போராட்டத்தில் நாட்டில் உயிர் வாழ்வதற்காக உரிமையை அடிப்படை உரிமையாக வேண்டும் என்று கோசம் எழுப்பினர்.

இதேபோன்று முல்லைத்தீவு நீராவியடி விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்பை அவமதித்துச் செயற்பட்டதற்கும் எதிர்ப்பைத் தெரிவித்தமையுடன் இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.











# டில்லியில் நடந்த சீக்கியர்கள் பேரணியில் சீமான் பங்கேற்பு

புதுடில்லி, செப்.28

காஷ்மீரில்சிறப்புசட்டப்பிரிவுநீக்கப் பட்டதை கண்டித்தும், அங்கு அரசியல் தலைவர்கள் மீதான அடக்குமுறை களைக் கைவிட வலியுறுத்தியும் சில சீக்கிய அமைப்புகள்சார்பில் டில்லியில் நேற்றுமுன்தினம் தேச இன ஒற்றுமை அணிவகுப்பு பேரணி நடைபெற் றது.

நாடாளுமன்றம் அருகே உள்ள ரகாப் கஞ்ச் குருத்துவரா (சீக்கியர் கோவில்) முன் தொடங்கிய இந்த பேரணியில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் அக்கட்சியின் நிர்வாகிகள் சிலர் கலந்து கொண்டனர்.

அப்போது சீமான், காஷ்மீரில் மக்கள் தலைவர்களை வீட்டுச் சிறையிலும், பொதுமக்களை திறந்தவெளி சிறையி லும் வைத்துக் கொண்டு விடுதலை வாங்கித் தந்து விட்டோம் என்று கூறு வது வேடிக்கையானது. இந்தியா பல மாநிலங்களின் ஒன்றியம் என்பதை ஆட்சியாளர்கள் மறந்துவிட்டனர் என்று கூறினார்.



# விடிய, விடிய கொட்டித்தீர்த்த மழை புனேயில் வெள்ளம்; 17 பேர் பலி



புனே, செப்.28

நேற்றுமுன்தினம் காலை வரை நீடித்த பேய் மழையால் புனேயின் பல்வேறு பகுதிகள் வெள்ளத் தில் மிதந்தன. பல தெருக்களில் சுமார் 7 அடி உயரத்துக்கு மழை வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

இதனால்பொதுமக்கள்மொட்டை மாடி கூரைகளில் தஞ்சம் அடைந் தனர். மேலும் பலர் மரங்களில் ஏறி யும் உயிரை காப்பாற்றிக் கொண் டனர். பொழுது விடிந்தபோது தான் புனேநகரம்உருக்குலைந்துகிடந்தது தெரியவந்தது. தெருக்களில் குப்பை குவியல் போலவாகனங்கள் குவிந்து கிடந்தன. வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதில் வாகனங்கள் ஒன் றன் மீது ஒன்று மோதி உருக் குலைந்து கிடந்தன.

இந்த மழைக்கு ஒரே குடும்பத் தைச் சேர்ந்த 5 பேர் உள்பட 17 பேர் உயிரிழந்தனர் என மாவட்ட நிர் வாகம் தெரிவித்தது. புனேயில் ஒரே நாளில் 20 செ.மீ. மழை பதிவா னது. மழை காரண மாக புனே மாவட்டத்தில் நேற்று முன்தினம் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டது.

# வைத்தியசாலையில் திடீரென தீ விபத்து நோயாளி மரணம்

மேற்கு வங்க மாநிலத்தில் மருத்துவமனை யில் ஏற்பட்ட தீ விபத்தில் நோயாளி ஒருவர் உயிரிழந் துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்கு வங்க மாநிலத்தின் சிலிகுரி மாவட்டத் திலுள்ள வடக்கு வங்க மருத்துவக் கல்லூரி மருத்து வமனையில் திடீ ரென தீவிபத்து ஏற் பட்டுள்ளது. இந்த தீ விபத்தில் இதய நோய்கள் சம்பந்த மான பராமரிப்பு பிரிவில் அனும திக் கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் பலியானதாகக் கூறப்படுகிறது.



விபத்துக்கு பின்னர் மருத்துவமனையிலிருந்த மேலும் 9 நோயாளிகள், தனியார் மருத்துவம னைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். தீவிபத்து ஏற் பட்டதற்கான காரணம் குறித்த தகவல்கள் வெளி யாகவில்லை. மேலும் சேதங்கள் மற்றும் பாதிப்பு கள் குறித்த முழுமையான தகவல்களும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

# காஷ்மீர் 'குங்குமப்பூ'வுக்கு கிடைத்தது புவிசார் குறியீடு



ஸ்ரீநகர், செப்.28

காஷ்மீர் 'குங்குமப்பூ'க்கு புவிசார் குறியீடு கிடைத்து இருக்கிறது. இதனை ஆளுநரின் ஆலோச கர் பாரூக் அகமத்கான் அறிவித்தார்.

நறுமணம் கொண்ட குங்குமப்பூ, உணவுக்கு சுவையூட்டவும், வண்ணம் சேர்க்கவும் உதவும். இந்தியாவில் காஷ்மீர் மாநிலத்தில் இவை அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. கர்ப்பிணி பெண்கள் குங்குமப்பூ கலந்த பாலை குடிப்பதன் மூலம் குழந்தைகள் ஆரோக்கியமாக பிறக்கும் என்று பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் குழந்தைகள் சிவப்பாக பிறக்கும் என்று காலம் காலமாக மக்களிடையே ஓர் நம்பிக்கையும் உண்டு.

அத்தகைய குங்குமப்பூவுக்கு தற்போது ஓர் உய ரிய அங்கீகாரம் கிடைத்து இருக்கிறது. அதன்படி இது புவிசார் குறியீட்டை பெற்று இருக்கிறது. இதனை டில்லியில் நடந்த பட்டுக் கூடு ஏலச் சந்தை திறப்பு விழாவின்போது பாரூக் அகமத்கான் அறிவித் தார்.

மேலும் அவர் கூறுகையில், இதன் மூலம் காஷ் மீர் குங்குமப்பூவுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்து உள்ளது. காஷ்மீர் தயாரிப்புகளான பட்டு, வாதுமைப் பருப்புகள் (வால்நட்), பழங்கள் போன்றவைகளுக்கும் புவிசார் குறியீடு வழங்க வேண்டும் என்று அரசிடம் கோரிக்கை வைத்துள்ளோம். அவையும் நிறைவேறி னால் காஷ்மீர் பொருள்கள் உலகளவில் அங்கீகரிக் கப்பட்டு உள்ளூர் விவசாயிகளின் வருமானம் அதி கரிக்க உதவும் என்றார்.

# வான் கவிழ்ந்து 3 பேர் உயிரிழப்பு

தேவதானப்பட்டி, செப்.28

தேவதானப்பட்டி அருகே சரக்கு வான் கவிழ்ந்து 3 பேர் பரிதாபமாக பலியானார்கள்.

தேனி மாவட்டம் தேவதானப்பட்டி அருகே மஞ் சளாறு பகுதியைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்கள் 10 பேர் உர மூடைகளுடன் சரக்கு வாகனத்தில் பெரிய குளத்துக்குச் சென்றனர்.

தேவதானபட்டியை அடுத்த தண்ணீர்பந்தல் பகுதியில் வந்த போது வானில் அதிக அளவு பாரம் இருந்ததால் அந்த வான் நிலை தடுமாறி சாலை யின் நடுவே தலைகீழாக கவிழ்ந்ததில் தொழிலாளர் கள் விபத்துக்கு உள்ளாகினர். அதில் மூவர் சம்பவ இடத்திலே பலியாகினர். காயமடைந்தவர்கள் வைத் தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# பிரதமர் மோடி அறிவித்தபடி விண்வெளிக்கு வீரர்களை அனுப்புவதில் 'இஸ்ரோ' தீவிரம்

## அதன் தலைவர் சிவன் தகவல்

ஆமதாபாத், செப்.28

பிரதமர் அறிவித்த ககன்யான் திட்டப்படி, விண்வெளிக்கு வீரர்களை அனுப்பும் திட்டத்தை செயல்படுத்துவதில் இஸ்ரோ தீவிரமாக உள்ளது என அதன் தலைவர் கே.சிவன் தெரிவித்தார்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு இஸ்ரோ வின் தலைவர் கே. சிவன், நேற்று முன்தினம் குஜராத் மாநிலம், ஆமதாபாத்தில் 'இந்தியாவை மாற்றும் அமைப்பு' என்ற தலைப்பிலான மாநாட்டில் கலந்து கொள்ள சென்றார்.

அங்கு அவர் விமான நிலையத்தில் நிருபர் களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர், சந்திரயான்-2 விண்கலத் தின் ஒபிட்டர் மிக நன்றாக செயல்பட்டு வருகிறது. விக்ரம் லாண்டரிடம் இருந்து நாங்கள் சமிக்ஞை எதையும் பெறவில்லை என கூறினார்.

சந்திரயான்-2 விண்கல திட்டம் போன்று வேறு எதுவும் திட்டம் உள்ளதா? என கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு கே.சிவன், நாங்கள் விரிவான எதிர்கால திட்டத்தை வகுத்து வருகிறோம் என பதில் அளித்தார்.



விக்ரம் லாண்டர் பற்றிய கேள்விக்கு அவர் பதில் அளிக் கையில், விக்ரம் லாண்டர் தரை இறங் குவதில் ஏற் பட்ட பிரச் சினைக்கு காரணம் என்ன என்பதை கண் டறிவதற்கு தேசிய அளவில் ஒரு குழு அமைக்கப்பட் டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்த பிறகு எதிர்காலத் தில் என்ன செய்வது என்பது குறித்து நாங்கள் பணி யாற்றுவோம் என்றார்.

தொடர்ந்து அவர் பேசும்போது, இனி வரும் மாதங் களில், ஆண்டுகளில் தொடர்ச்சியாக பல வேறு திட்டங்களை இஸ்ரோ வைத்துள் ளது. அவற்றில் மிக முக்கியமான திட் டம் ககன்யான் திட்டம். விண்வெளிக்கு வீரர்களை அனுப்பும் திட்டம் இது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இஸ்ரோ மிக கடுமையாக உழைத்து வருகிறது. பிரதமர் வெளியிட்ட அறி விப்பின் படி, 2022 ஆம் ஆண்டுக் குள் இந்தத் திட்டத்தை நாங்கள் வெற்றி கரமாக நடத்திக்காட்ட வேண்டி இருக் கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

ககன்யான் திட்டம், 3 வீரர்களை விண்வெளிக்கு அனுப்பி அவர்களை மீண்டும் பத்திரமாக இங்கு கொண்டு வந்து சேர்ப்பதாகும். இதற்காக வீரர்கள் தேர்வு செய்து, ரஷ்யாவில் பயிற்சி அளிக்க நடவ டிக்கை எடுக்கப்படுகிறது.

# தங்கச்சுரங்கம் இடிந்து வீழ்ந்தது; 30 பேர் பலி



சாட் நாட்டில் சட்டவிரோதமாக செயல்பட்டு வந்த தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்த விபத்தில் 30 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

வடக்கு – மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள சாட் குடியரசு நாட்டைச் சுற்றி லிபியா, சூடான் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகள் உள்ளன.

சாட் நாட்டின் லிபிய எல்லை பகுதியான கொவ்ரி பவ்டி நகரில் உள்ள சுரங்கங்களில் தங்கம் இருப்பது கடந்த 2012 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அப்பகுதியைச் சேர்ந்த சிலர் சட்டவிரோதமாக சுரங்கம் அமைத்து தங்கத்தை எடுத்து வெளிச்சந்தைகளில் விற்பனை செய்கின்றனர்.

இந்தநிலையில், கொவ்ரி பவ்டி பகுதிகளில் 30 இற்கும் அதிகமானோர் சட்டவிரோதமாக சுரங்கம் அமைத்து தங் கத்தை எடுக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக சுரங்கத்தின் மேல் பரப்பில் இருந்த மண் திடீரென இடிந்து விழுந்தது. இந்த விபத்தில் சுரங்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த அனைவரும் சிக்கிக் கொண்டனர். தகவலறிந்த மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்குச் சென்று மீட்பு பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

தங்கச் சுரங்கம் மண் சரிவால் முற்றிலும் மூடப்பட்டிருப்பதால் அதில் சிக்கியுள்ள அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

## 550 மீற்றர் உயரமான மலையை 46 நிமிடங்களில் ஏறிச் சாதனை



சுவிற்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த மலையேறும் வீரரான டேனி அர்னால்ட் , 550 மீற்றர் உயரம் கொண்ட கரடு முரடான மலையை நாற்பத்தி ஆறே நிமிடங்களில் ஏறி சாதனை படைத்துள்ளார்.

புகழ்பெற்ற இத்தாலிய ஆல்ப்ஸ் மலையின் ஒரு பகுதியில் ஏறிய டேனி அர்னால்ட், கயிறு உள்ளிட்ட எவ்வித பாதுகாப்பு உபகரணங்களின் உதவியும் இல்லாமல் மலையில் விறுவிறுவென ஏறினார்.

மலை ஏறுவதில் சாகசக்காரரான அவர், ஆபத்தான செங்குத்து மலையில், சாதாரண சமதள பாதையில் நடப்பதைபோல நடந்தார். கைகளை லாவகமாக மலையில் ஊன்றி ஊன்றி, முன்னேறிச் சென்ற அவர், 46 நிமிடம் 30 விநாடி களில் மலையின் உச்சியை அடைந்து சாதனை படைத்தார்.

ஐரோப்பிய வடக்கு மலைப்பகுதிகளில் நான்கு முறை தனியாக ஏறிச் சாதனை படைத்தவர் என்ற பெருமையையும் டேனி அர்னால்ட் பெற்றுள்ளார்.

## கொத்துக் கொத்தாக இறந்து கரை ஒதுங்கிய திமிங்கிலங்கள்

ஆபிரிக்க நாடான கேப் வெர்டேவில், நூற்றுக்கணக்கான திமிங்கிலங்கள் உயிரிழந்து கரை ஒதுங்கியுள்ளன. அங்குள்ள போவாவிஸ்டாதீவுப் பகுதியில் அமைந்துள்ள கடலில் கரை ஒதுங்கிகிடந்த இந்த திமிங்கிலங்கள், எந்த காரணத்தால் உயிரிழந்தன என்பது மர்மமாக இருந்து வருகிறது.



அதற்கான காரணத்தை அறிய உடற்கூறு ஆய்வும் நடத்தப்பட்டுள்ளது. மொத்தம் 134 மெலன் தலை வகை திமிங்கிலங்கள் இறந்திருக்கின்றன என கணக்கிடப்பட்டுள்ளது.

திமிங்கிலங்கள் திடீரென கொத்துக் கொத்தாக இறந்து கரை ஒதுங்கி கிடக்கும் காட்சி காண்போருக்கு அதிர்ச்சி அளிப்பதாக அமைந்துள்ளது.

பொதுவாக, உடல் நலக் கோளாறு, திடீர் பருவ நிலை மாற்றம் உள்ளிட்ட காரணங்களால் திமிங்கிலம் மற்றும் டொல்பின்களுக்கு இம்மாதிரி நிகழக்கூடும் என கூறப்படுகிறது. அதேபோல, திமிங்கிலங்கள் கடலில் திசைமாறி செல்லும்போதோ, வேட்டையாடப்படும்போதோகூட இம்மாதிரி சம்பவங்கள் ஏற்படவாய்ப்புள்ளன எனவும் சொல்லப்படுகிறது.

## இந்தோனேசியா நிலநடுக்கம்: 20 பேர் சாவு; பலர் படுகாயம்



ஜகார்த்தா, செப்.28

இந்தோனேசிய நாட்டின் கிழக்கு பகுதியில் உள்ள மலுகு மாகாணத்தின் அம்போன் நகரில் நேற்றுமுன் தினம் அதிகாலை சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 6.8 புள்ளிகளாக பதிவானது.

இந்த நில நடுக்கம் கடலுக்கு அடியில் 29 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. சில வினாடிகள் நீடித்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் பயங்கரமாக குலுங்கின. இதனால் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த மக்கள் திடுக்கிட்டு எழுந்தனர்.

பீதியடைந்த அவர்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்தனர். இந்த நிலநடுக்கம் கடலுக்கு அடியில் ஏற்பட்டபோதும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

நிலநடுக்கத்தால் வீடுகள் உள்ளிட்ட சில கட்டடங்கள் இடிந்து சேதம் அடைந்தன. மேம்பாலங்கள் மற்றும் சாலைகளில் விரிசல்கள் ஏற்பட்டன.

இந்த நிலநடுக்கத்தில் சிக்கி ஒரு பச்சிளம் குழந்தை உள்பட 20 பேர் பலியாகினர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

## பிரான்ஸ் இரசாயன தொழிற்சாலையில் பெரும் தீ விபத்து

பாரிஸ், செப்.27

பிரான்ஸ் நாட்டில் உள்ள லுப்ரிசால் இரசாயன உற்பத்தி தொழிற்சாலையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்டு பல்வேறு நாடுகளில் இயங்கி வருவது லுப்ரிசால் இரசாயன தொழிற்சாலை. இந்த லுப்ரிசால் தொழிற்சாலையின் ஒரு பிரிவு பிரான்ஸ் நாட்டின் ரூயென் நகரில் இயங்கி வருகிறது. அபாயகரமான இரசாயன பொருள்கள் தயாரிக்கின்றமையால் இது அரசு அதிகாரிகளின் தீவிர கண்காணிப்பில் இயங்கி வருகிறது.

இந்தநிலையில், உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் நள்ளிரவு 2.40 மணியளவில் லுப்ரிசால் தொழிற்சாலையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்தினால் அந்த பகுதி முழுவதும் கரும் புகை சூழ்ந்தது. உயிர்ச்சேதம் மற்றும் பொருள்சேதம் பற்றி எந்த தகவல்களும் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை.

## என்னைப் பதவியை விட்டு நீக்க அமெ. நாடாளுமன்றம் விசாரணை

### வேடிக்கையானது என டிரம்ப் கருத்து

நியூயோர்க்,செப்.28

என்னை பதவியை விட்டு நீக்க, அமெரிக்க நாடாளுமன்றம் விசாரணை நடத்துவது வேடிக்கையானது என ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடக்கிறது. இதில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிட உள்ள ஜனாதிபதி டிரம்பை எதிர்த்து ஜனநாயக கட்சி சார்பில் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடென் போட்டியிடுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இந்தநிலையில், ஜோ பிடெனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில், உக்ரைனில் பணியாற்றிய அவரது மகனுக்கு எதிராக விசாரணை நடத்த வேண்டும் என்று அந்த நாட்டின் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை டிரம்ப் மிரட்டினார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது பதவி ஏற்பின்போது டிரம்ப் அளித்த உறுதிமொழியை மீறிய செயல் என கூறி அவரை பதவியை விட்டு நீக்குவதற்கான விசாரணையை அமெரிக்க நாடாளுமன்றத்தில் (பிரதிநிதிகள் சபை) ஜனநாயக கட்சி தொடங்கி உள்ளது. இந்த விசாரணை வேடிக்கையானது என டிரம்ப் கருத்து கூறி நிராகரித்துள்ளார்.



இதுபற்றி அவர் கூறுகையில், "இந்த சூனிய வேட்டையில் அவர்கள் (ஜனநாயக கட்சியினர்) தீவிரம் காட்டுகிறார்கள். ஆனால் இது வேடிக்கையானது" என தெரிவித்தார்.




பாற்கடல்
மு.சிவநேசன்
sivanesan@usa.com

# உறை கடலில் ஊடுருவல்

இருளில் துருவக் கரடிகளின் தாக்குதல் அச்சம் புறக்கணிக்கத் தக்கது அல்ல என் கிறார் Stefanie Arndt என்ற நிபுணர். அணிகளுக்கு துப்பாக்கிகள் வழங்கப்பட்டு பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளது. முகாம்களை சுற்றி பாதுகாப்பு வேலிகள் அமைக்கும் திட்டமும் உள்ளதாம். என்றாலும் இருளில் குளிரில் கரடிகளிலிருந்து பாதுகாப்பாக நிம்மதி யாக உறங்க முடியுமா என்ற ஏக்கம் இல்லா மலா போகும்? கரப்பொத்தான் பூச்சிக்கே அஞ்சும் பெண்களும் அணியில் இணையத்தான் செய்கிறார்கள்.

தென் துருவத்தில் தென் கடல் சூழ நடுவில் ஓரளவிற்கு வட்ட வடிவாக அன்ராட்டிக்கா கண்டம் அமைந்துள்ளது. மாறாக வட துருவத்தில் நாட்டு தரைப் பரப்புக்கள் சூழ நடுவில் ஓரளவிற்கு வட்ட வடிவாக ஆக்டிக் கடல் அமைந்து விட்டது.

கடலெது கண்டமெது என்று தெரியாத வகையில் இரண்டுமே பனிப் போர்வையால் போர்க்கப்பட்டுள்ளன. இரு துருவங்களையும் இரண்டு திசைகளாகப் பயணித்து தடம் பதித்த நோர்வேஜியன் வட தென் துருவ பயண மன்னன் Roald Amundsen தான் என்றால் மிகையாகாது.



ஆக்டிக்கை பொறுத்தவரை இந்த வாரம் மீண்டும் முக்கியத்துவம் பெறுகிறது. 2019 செப்ரெம்பர் 19 இல் கப்பல் தயாராகிவிட்டது.19 நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட விஞ்ஞானிகளைச் சுமந்து கொண்டு இந்த ஆராய்ச்சிக் கப்பல் நோர்வேயின் வட துறைமுகம் ஒன்றிலிருந்து வடக்கு நோக்கிய ஒரு வருட பயணத்தை ஆரம்பிக்க இருக்கிறது.

நூறு சுறுசுறுப்பான பல நாடுகளின் விஞ்ஞானிகளை, அவர்களின் கருவிகளை, அவர்களுக்கு ஒரு வருடத்துக்குத் தேவையான விநியோகங்களைச் சுமந்து கொண்டு 20.09.2019 அன்று ஜேர்மனிய ஐஸ் பிறேக்கர் பனிப் பாளங்களை உடைத்துப் பிளந்து பயணிக்கவல்ல Polarstern என்ற கப்பல் வட துருவப் பயணத்தை ஆரம்பித்திருக்கின்றது. இவர்களை; அத்தனைபேரையும் ஒரு வருடத்துக்கு உறை கடலில் வைத்து சமாளிப்பது அவ்வளவு சுலபமான பணியாக இருக்கப் போவதில்லை. என்ன நடக்கிறது எப்படி நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்க்கலாம்.

காலநிலை மாற்றம் என்ற கருப்பொருளில் பருவகால மாற்றங்கள் பற்றிய விரிவான ஆய்வுகளை இது மேற்கொள்ளப் போகிறது. இதுவரை மேற்கொள்ளப்படாத பிரமாண்டமான ஆய்வுப் பணி இது எனலாம்.

பல கொள்கலன்களில் பொருள்கள், ஆய்வு சாதனங்கள், நூறு பேருக்கு ஒரு வருடத்திற்கு தேவையான விநியோகங்கள், எனப் பலவும் ஏற்றப்பட்டு நோர்வேயின் Tromso துறை யில் கப்பல் கம்பீரமாக புறப்பட்டுள்ளது. இது மத்திய ஆக்டிக் கடலை சென்றடைந்தாக வேண்டும். இதனுடன் உதவிக்கு ஒரு ரஷ்ய கப்பலும் செல்கிறது.

இந்த மாபெரும் அணியின் தலைவர் ஜேர்மனியரான பேராசிரியர் Markus Rex தகவல் தருகையில் பருவநிலை மாற்றத்தின் மையப்புள்ளி ஆக்டிக் மையமே எனத் தெரிவித்துள்ளமை ஆய்வுகளின் நோக்கத்தை தெளிவுபடுத்துகிறது.

இப் பணிக்கான செலவீனம் கொஞ்ச நஞ்சமல்ல, 158 மில்லியன் இயூறோக்கள். பணத்தைக் கொட்டி உலகினைக் காக்கும் ஆய்வுகளை மேற்கொள்ள இவர்கள் தயாராகிறார்கள்.


அவர்களது பயணத்தின் ஆணி வேரான, ஆதாரமான தாய்க் கப்பல் Polarstern 1982 இல் கட்டப்பட்டது. 12,614 தொன் எடை கொண்ட இது 118 மீற்றர் நீளமானது. மைனஸ் 50 பாகை செல்சியஸ் உறை குளிரில் செயற்பட வல்லது.

2008 இல் இதன் ஹெலிகொப்டர் ஒன்று விபத்துக்குள்ளானதில் விமானியும் விஞ்ஞானி ஒருவரும் கொல்லப்பட்டனர். மூவர் காயங்களுக்கு இலக்காகினர். பல சாதனைகளைப் புரிந்த பயண வரலாறும் இதற்கு உண்டு.




கப்பல் நங்கூரமிட பொருத்தமான மிதக்கும் ஐஸ் தீவை தீர்மானிப்பது முதல் கள நிலைமைகளை மதிப்பீடு செய்து ஆய்வுகளை நெறிப்படுத்தும் பணி மாக்கஸ் றெக்ஸ் இனது பொறுப்பில் உள்ளது. கப்பலில் இருந்து விலகி ஆங்காங்கே குழுக்கள் பலமைல்கள் தொலைவில் ஆய்வு மையங்களை அமைக்கப் போகின்றன.

சுழற்சி முறையில் ஆய்வாளர்கள் கப்பலுக்கும் முகாமுக்கும் இடம் மாறிக்கொள்வர். குளிரும் இருளும் பெரும் பிரச்சினைகளாக எதிர்பார்க்கப்படுகின்றன என ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள். வருடத்தில் 150 நாள்கள் மட்டுமே பகல் பொழுதை அங்கே எதிர்பார்க்கிறார்கள் அவர்கள்.



இருளில் துருவக் கரடிகளின் தாக்குதல் அச்சம் புறக்கணிக்கத் தக்கது அல்ல என்கிறார் Stefanie Arndt என்ற நிபுணர். அணிகளுக்கு துப்பாக்கிகள் வழங்கப்பட்டு பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளது. முகாம்களை சுற்றி பாதுகாப்பு வேலிகள் அமைக்கும் திட்டமும் உள்ளதாம். என்றாலும் இருளில் குளிரில் கரடிகளிலிருந்து பாதுகாப்பாக நிம்மதியாக உறங்க முடியுமா என்ற ஏக்கம் இல்லாமலா போகும்? கரப்பொத்தான் பூச்சிக்கே அஞ்சும் பெண்களும் அணியில் இணையத்தான் செய்கிறார்கள்.

வெண்ணிறமான துருவக் கரடிகள் பார்ப்பதற்கு மிகவும் அழகானவை. கவர்ச்சிகரமானவை. உறை குளிரில் மைனஸ் வெப்ப நிலைகளில் வாழப் பழகிவிட்ட அவற்றிற்கு மனிதர்களை வெகு தொலைவிலேயே மோப்பம் பிடிக்க இயலும்.

வளர்ந்த கரடியொன்றின் எடை ஐந்து முதல் பத்து மனிதர்களின் எடைக்குச் சமமானதாக, சுமார் 350 முதல் 700 கி.கி வரையில் இருக்கலாம். அவற்றின் வலு பற்றி குறிப்பிடத் தேவையில்லை. பழக்கப்பட்ட வழுக்கும் பனிப் படையில் அது ஓர் அடி எட்டி வைத்தால் மனித இதயம் துடிப்பு அடங்கிவிடும். ***(இன்னும் வளரும்)***

# யாழ். பல்கலையில் திலீபன் நினைவேந்தல்









யாழ்ப்பாணம், செப். 28

தியாக தீபம் திலிபனின் நினைவேந்தல் ஆரம்ப நிகழ்வு கடந்த 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தியாகி திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த நேரமான காலை 9.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகியது.

இறுதி நாள் நிகழ்வு நேற்று முன் தினம் தாயகம் எங்கும் நடைபெற்ற நிலையில் யாழ். பல்கலையில் உயிர்கொடை அளித்தவர் நினைவாய் அளித்திடுவோம் குருதிக்கொடை என்ற வாசகத்துடன் இரத்தான முகாம் அமைத்து அதிகளவான மாணவர்கள் குருதிக்கொடை அளித்தனர்.

குருதிக்கொடை அளித்த பின்பு திலீபன் வீரச்சாவை தழுவிய நேரத்தில் நினைவு நிகழ்வு இடம்பெற உள்ளது.

அதனைத் தொடர்ந்து திலீபன் நினைவுகள் விருட்சமாக வேண்டும் எனும் எண்ணத்தில் பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ஐ)

# சிறுபான்மையினக் கட்சிகளுக்கு கிடைத்த வெற்றியே சஜித் வருகை

## வேலுகுமார் எம்.பி. பெருமிதம்



கொழும்பு, செப். 28

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாச அறிவிக்கப்பட்டுள்ளமையானது சிறுபான்மையினக் கட்சிகளின் அழுத்தத்துக்கு கிடைத்த ஆரம்ப கட்ட வெற்றியாகும். அத்துடன், இந்த ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினக் கட்சிகளே பிரதான பாத்திரத்தை வகிக்கும் என்பதும் இதன்மூலம் உறுதியாகியுள்ளது – என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சியின் மத்திய செயற்குழு நேற்றுமுன்தினம் ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியது. இதனையடுத்து சஜித் பிரேமதாஸவின் வருகையை ஆதரித்து ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அதன் தோழமைக்கட்சிகளின் ஆதரவாளர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் பட்டாசு கொளுத்தி பெரும் ஆரவாரத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் கண்டியில் நேற்றுமுன்தினம் மாலை ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய வேலுகுமார் எம்.பி, மேலும் கூறியதாவது –

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை களமிறக்குவதற்கு அக்கட்சியின் உயர்பீடம் ஆரம்பத்தில் வெளிப்படையாக விருப்பத்தை வெளிப்படுத்தவில்லை. எனினும், நாட்டு மக்கள் சஜித்தையே கோருகின்றனர் என்றும், அவரையே வெற்றி வேட்பாளராக போட்டியிட வைக்கவேண்டும் என்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி உட்பட சிறுபான்மையினக் கட்சிகள் வலியுறுத்தின.

இந்த நிலைப்பாட்டிலிருந்து எம்மை பின்வாங்க வைப்பதற்கு பல வழிகளிலும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், கொண்டகொள்கையில் நாம் உறுதியாக நின்றோம். இறுதியில் இன்று வெற்றியும் பெற்றுள்ளோம்.

சஜித் நிச்சயம் வருவார் என எமது மக்களுக்கு உறுதி வழங்கினோம். அவர் தற்போது வந்துவிட்டார். இதன்பின்னணியில் எமது பங்களிப்பும் அளப்பரியது.

அரசில் பங்காளிகளாக அங்கம் வகித்தாலும் அவர்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டும் பாவைகள் அல்ல நாம் என்பதை மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தியுள்ளோம். எமக்கென தனித்துவமான கொள்கைகள், எண்ணங்கள் இருக்கின்றன. அவற்றை எந்த கொம்பனுக்காகவும் நாம் விட்டுக் கொடுக்கமாட்டோம்.

ஜனாதிபதித் தேர்தலின்போதுகூட சிறுபான்மையினக் கட்சிகளே பிரதான பாத்திரத்தை வகிக்கப் போகின்றன. ஆகவே எமது மக்களுக்காக எவற்றையெல்லாம் செய்யமுடியுமோ அவற்றையெல்லாம் வெற்றிகரமாக செய்துமுடிக்க முயற்சிப்போம்.

கடந்த நான்கரை வருடங்களில் உரிமை அரசியலுக்கும் முன்னுரிமை வழங்கி பல விடயங்களை வென்றெடுத்தோம்.மேலும் பல திட்டங்களுக்கு அடித்தளமிட்டுள்ளோம். ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் அவற்றையும் செய்துமுடித்து மலையக அரசியலில் வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்துவோம் – என்றார். (ஐ)

# ஜனநாயக தேசிய முன்னணி ஒக்ரோபர் 9 இல் உதயம்!

*கொழும்பு, செப். 28*

*ஐக்கிய தேசியக் கட்சியின் பங்காளிக் கட்சிகள் இணைந்த ஜனநாயக தேசிய முன்னணி ஒக்ரோபர் 9 ஆம் திகதி உருவாக்கப்படுமெனத் தெரிகிறது.*

*ஜனாதிபதி வேட்பாளராக சஜித் இதன் கீழ் களமிறங்கவுள்ளார். முன்னணியின் பொதுச் செயலாளராக ராஜித சேனாரத்ன நியமிக்கப்படவுள்ளார்.*

*இதேவேளை, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் கூட்டணி ஒக்ரோபர் 5 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது. (ஐ)*

# மைத்திரி – கோட்டா முக்கிய சந்திப்பு!

கொழும்பு, செப். 28

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ,ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்குமிடையில் விசேட சந்திப்பொன்று நடந்துள்ளது.

கடந்த செவ்வாய் நடந்த இந்தச் சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து விரிவாக பேசப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் பரஸ்பரம் விமர்சனங்களை பொதுவெளியில் செய்வதை தவிர்த்துக் கொள்ளவேண்டுமெனவும், மஹிந்த தரப்பை பகிரங்க விமர்சனமாக செய்வதை நிறுத்துமாறுதனது கட்சிக்காரருக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மைத்திரி இந்தச் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார் என அறியமுடிந்தது.

இந்தச் சந்திப்பின் பின்னரே மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோஷித்த ராஜபக்ஷவைக் கடற்படையில் மீண்டும் இணைக்க ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என அறியமுடிந்தது. (ஐ)

# கொழும்பை குடிசைகளற்ற நகராக மாற்ற நடவடிக்கை

கொழும்பு, செப். 28

கொழும்பை குடிசைகள் அற்ற நகராக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், ‘தற்போது மாணவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதே பிரதான பிரச்சினையாக உள்ளது.

கடந்த குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் நாட்டின் தொழிற்படையில் 52,000 பேர் நாட்டை விட்டு சென்றுள்ளனர்.

நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 30 இலட்சம் பேர் தற்போது வெளிநாடுகளில் வாழ்கின்றனர். அதற்கமைவாக தனது அமைச்சின் மூலம் தங்கியிருப்பதற்கு உகந்த நாடு என்ற தொனிப்பொருளில் வேலைத் திட்டங்கள் இடம்பெறுகின்றன.

நாட்டில் நகரங்களை உருவாக்கும் போது நகரங்களுக்கு உள்ளே அபிவிருத்திகள் இடம்பெற வேண்டும். வெள்ளக் கட்டுப்பாடு, கழிப்பறைகள், கழிவுநீர் கட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து முறை ஆகியவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் பின்னர் கொழும்பு நகரை படிப்படியாக கட்டியெழுப்பும் திட்டத்தை தற்போதைய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 2023ஆம் ஆண்டில் கொழும்பை குடிசைகள் அற்ற நகராக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன’ எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# இலங்கை கிரிக்கெட் அணியுடனான ரி - 20 தொடரை உறுதி செய்த இந்தியா

இங்கிலாந்தில் நடைபெற்று முடிந்த உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் முடிந்த கையோடு, அனைத்து அணிகளும் அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெற வுள்ள ரி - 20 உலகக்கிண்ண தொடருக்கு தயாராகிவிட்டன.

இதனால், ரி - 20 உலகக்கிண்ண தொடருக்கு தயாராகும் வகையில், ஒவ்வொரு அணிகளும் போட்டி போட்டுக் கொண்டு, ரி – 20 போட்டிக்கான அட்டவணையை தயார் செய்து வருகின்றன.



இதற்கிடையில் இந்திய அணி, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம், இலங்கையுடன் மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரில் விளையாடவுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளிவந்த வண்ணமிருந்தன.

இந்த நிலையில், இரு அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரை, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை உறுதி செய்துள்ளது.

இது குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ள இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, இந்தப் போட்டித் தொடரின் அட்டவணையையும் வெளியிட்டுள்ளது.

இதன்படி, முதலாவது ரி – 20 போட்டி எதிர்வரும் ஜனவரி மாதம் 5ஆம் திகதி குவாஹாத்தியில் நடைபெறவுள்ளது.

இரண்டாவது ரி – 20 போட்டி 7ஆம் திகதி இந்தூரிலும், மூன்றாவதும் இறுதியுமான ரி – 20 போட்டி 10ஆம் திகதி புனேயிலும் நடைபெறவுள்ளன.

ஏற்கனவே சிம்பாப்வே மற்றும் ஆஸ்திரேலியா அணிகள் இந்தியா வந்து விளையாடுவதாக இருந்தது. இதனால் இலங்கை அணியும் இந்தியா வந்தால் போட்டி அட்டவணையைத் தயாரிக்க இந்தியாவுக்கு கடினமான நிலை ஏற்படும் என்பதால், இலங்கை அணியை வரவழைப்பதா இல்லையா என்ற நிலை இருந்தது.

அத்தோடு, இலங்கை அணியும் இந்தியா வந்தால் ஒரு வாரத்திற்குள் மூன்று போட்டிகளையும் நடத்தவேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தற்போது, சிம்பாப்வே அணியுடனான தொடரை இரத்துச் செய்து, இலங்கை அணியை வரவழைக்க இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முடிவு செய்துள்ளது.

சிம்பாப்வே கிரிக்கெட் சபையில் அரசியல் தலையீடு இருப்பதாக எழுந்த புகாரை தொடர்ந்து அந்த நாட்டு கிரிக்கெட் சபையை தற்காலிகமாக இடைநீக்கம் செய்வதற்கு ஐ.சி.சி நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்தத் தடை காரணமாக கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற பெண்கள் ரி – 20 உலகக் கிண்ணப் தொடருக்கான தகுதிச் சுற்று மற்றும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள ஆண்கள் ரி – 20 உலகக் கிண்ணப் தொடருக்கான தகுதி சுற்றுப் போட்டியில் சிம்பாப்வே அணிக்கு விளையாட தடை விதிக்கப்பட்டது

இந்தப் பின்னணியில் தான் ஏற்கனவே திட்டமிடப்பட்ட சிம்பாப்வே அணியுடனான தொடரை ரத்துச் செய்ய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்தது.

இறுதியாக 2017ஆம் ஆண்டு இலங்கை அணி, மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடுவதற்காக இந்தியாவுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்தது. அதில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1 – 0 என இந்திய அணி கைப்பற்றியது. ஒரு நாள் தொடரை 2 –1 எனவும், ரி – 20 தொடரை 3 – 0 என இந்திய அணி கைப்பற்றியிருந்தது.

இதேவேளை, இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையில் 2009ஆம் ஆண்டுக்குப் பிறகு 16 ரி – 20 போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் இந்திய அணி 11 போட்டிகளிலும், இலங்கை அணி 5 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை ராணுவத்தில் இணைந்தார் சந்திமல்

இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் தினேஷ் சந்திமல் நேற்று இலங்கை ராணுவத்தில் இணைந்துள்ளார்.

இலங்கைதன்னார்வப் படையணியின் அதிகாரியாக தினேஷ் சந்திமல் சேவையாற்றவுள்ளார்.

சந்திமலின் கோரிக்கையை பாதுகாப்பு அமைச்சகம் ஏற்றுக்கொண்டதாக மேஜர் ஜெனரல் அத்தப்பத்து கூறினார்.

இதேவேளை, இலங்கை ராணுவப் படையின் அதிகாரி என்பதால் இலங்கை ராணுவ கிரிக்கெட் அணிக்காக சந்திமால் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னாள் இலங்கை கிரிக்கெட் அணித்தலைவர் சந்திமால், எதிர்காலத்தில் நுழைவுத் தேர்வை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று இராணுவ செய்தித் தொடர்பாளர் கூறினார்.

மேலும், தேசிய விளையாட்டு வீரர்கள் நால்வர் அடுத்த இரு வாரங்களில் ராணுவத்தில் இணையவுள்ளனர் என இலங்கை ராணுவத்தின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வலது கை துடுப்பாட்டக்காரரான சந்திமலின் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை சமீபத்திய காலங்களில் எதிர்பார்த்த விதத்தில் அமையவில்லை. அவர் தனது அணித்தலைவர் பதவியை மட்டுமல்லாமல், அணியில் தனது இடத்தையும் இழந்தார்.





# விறுவிறுப்பான ஆட்டத்தின் மத்தியில் கிண்ணம் வென்றது ஆவரங்கால் இந்து

இளவாலை வருத்தபடாத வாலிபர் சங்கத்தால் அமரர் சிவகுருநாதன் அவர்களின் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் கரப்பந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதியது.

5 சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியின் முதல் சுற்றை கடுமையாக போராடி தமதாக்கியது ஆவரங்கால் இந்து. தொடர்ந்து ஆரம்பமாகிய 2வது சுற்றில் புத்தூர் கலைமதி தமது உச்சகட்ட ஆற்றலை வெளிப்படுத்தி சுற்றை 24 – 25 என்ற நெருக்கமான புள்ளிக்கணக்கில் தமதாக்கியது.

இரு அணிகளும் ஒவ்வொரு சுற்றுக்களை தமதாக்கிய நிலையில் பெரும் எதிர்பார்ப்பின் மத்தியில் 3வது சுற்று விறுவிறுப்புடன் ஆரம்பமாகியது! இதில் ஆவரங்கால் இந்து மிகநுட்பமான தந்திரங்கள் மூலம் கலைமதியை 22 – 25 என்ற புள்ளிக்கணக்கில் வீழ்த்தியது.

தொடர்ந்து 4ஆவது சுற்று ஆரம்பமான நிலையில் இச்சுற்றை வென்றே ஆகவேண்டிய இக்கட்டான நிலைக்கு புத்தூர் கலைமதி நெருக்கப்பட மைதானத்தில் உற்சாக குரல் கள் அதிரவைத்தன. ஆயினும் ஆவரங்கால் இந்து சற்றும் தளராமல் தமது திடத்தை தக்கவைக்க தமது முழு பலத்துடன் உச்சகட்ட சவாலை விடுத்த கலைமதி தோல்வியை தழுவியது. ஆவரங்கால் இந்து 2ஆவது முறையாக சங்கத்தின் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக கீரிமலை நகுலேஸ்வரா மற்றும், இளவாலை மெய்கண்டான் பாடசாலை அதிபர்களும், வலிவடக்கு பிரதேச சபை உறுப்பினர் பிரதீபன், மற்றும் தொழிலதிபர் அன்டன் தேவராசா, அமரர் சிவகுருநாதனின் புத்திரர் கௌரிபாலன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ஐ)







# அடிப்படைவாதிகளுக்கெதிராக காரைதீவில் கண்டனப் பேரணி

அம்பாறை, செப். 28

முல்லைத்தீவு – செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய விவகாரத்தில் நீதிமன்ற கட்டளையை



அவமதிப்பு செய்த பேரினவாத பௌத்த அமைப்புக்கெதிராக அம்பாறை – காரைதீவு பிரதேசத்தில் கண்டனப் பேரணியொன்று இடம்பெற்றுள்ளது.

வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரினால் குறித்த போராட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

சட்ட ஆட்சியை உறுதிப்படுத்துக, அனைத்து விதமான பாரபட்சங்களை ஒழிக்குக, சிறுபான்மையினர் மீதான துஷ்பிரயோகங்களை நிறுத்துக போன்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி கோசங்கள் எழுப்பப்பட்டன.

மேலும் முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய விவகாரத்தில், முல்லைத்தீவு நீதிமன்றத்தின் கட்டளையை அவமதித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நீதிதுறையை அவமதித்த தேரர்களை கைது செய்யகோரியும் இந்து ஆலயங்களின் புனித தன்மையைப் பாதுகாக்குமாறு தெரிவித்தும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், ‘நீராவியடியில் செத்தது நீதி’, ‘நீதிமன்ற தீர்ப்புக்கு கட்டுப்படுங்கள்’, ‘சட்ட ஆட்சியை நிலைநிறுத்துங்கள்’ போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப் பியிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து, காரைதீவு சுவாமி விபுலாநந்தர் சதுக்கத்திலிருந்து பேரணியாக காரைதீவு பிரதேச செயலகம் வரை சென்று, மீண்டும் சுவாமி விபுலாநந்தர் சதுக்கத்தை வந்தடைந்து, அம்பாறை மாவட்ட மனித உரிமைகள் இணைப்பாளர் ஏ.எல். இஸ்ஸதீனிடம் மகஜர் ஒன்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்தனர். இந்த கண்டனப் பேரணியில் வடக்கு – கிழக்கு சிவில் அமைப்பினர், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.






# கிழக்கு ஆளுநர் அலுவலகம் முன்னாலும் நேற்று பெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!







திருகோணமலை, செப்.28

நீதிமன்ற அவமதிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வடக்கு – கிழக்கு தாயகப் பிரதேசத்தில் சிவில் அமைப்புகளால் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் முன்னால் நேற்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கண்டன போராட்டம் நடத்தப்பட்டது.

இதில் பெருமளவிலான சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பொது மக்களும் கலந்து கொண்டிருந்தனர். பல்வேறு விதமான பதாகைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் போராட்ட களத்திற்கு வந்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிகழா வண்ணம் இருக்க எல்லோரும் முன்வர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# 30 ஆம் திகதி கூடுகிறது சு.க. மத்திய செயற்குழு!

கொழும்பு, செப். 28

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியசெயற்குழு எதிர்வரும் திங்கட்கிழமை இரவு கட்சி தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடவுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்படவுள்ளன.

ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி போட்டியிடுமா அல்லது பிரதான வேட்பாளர்களில் ஒருவருக்கு ஆதரவளிக்குமா என்பது தொடர்பில் இன்னும் அதிகாரபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை.

இந்நிலையில் கூட்டணி அமைப்பது குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுடன் பேச்சுகளை முன்னெடுத்துவந்தாலும் சின்னத்தால் ஏற்பட்டுள்ள சர்ச்சை காரணமாக கலந்துரையாடல்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

‘மொட்டு’ சின்னத்தை கைவிடுமாறு சுதந்திரக்கட்சியால் விடுக்கப்படும் கோரிக்கையை ஏற்பதற்கு மஹிந்த தரப்பு மறுத்துவருகின்றது.

இரு தரப்புக்குமிடையிலான இறுதி சுற்றுப் பேச்சு 30 ஆம் திகதி காலை நடைபெறவுள்ளது. அதன்பின்னரே ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இறுதி முடிவெடுப்பதற்காக சு.கவின் மத்தியகுழு கூடவுள்ளது.

தினக்குரல்
THINAKKURAL
AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL
Online Media
LANKASRI



# தமிழர்களின் கலாசார சின்னங்களின் மீது பௌத்தத்தை நிறுவுவது நல்லிணக்கமா?

## ஈ.பி.ஆர்.எல்.எவ். கேள்வி

வவுனியா, செப். 28

தமிழ் மக்களினதும் சைவத் தலைவர்களினதும்எதிர்ப்புக்களையும்மீறிமுல்லைத் தீவுநீராவியடிப்பிள்ளையார்ஆலயதீர்த்தக் கேணி அருகில் கொலம்பே மேதாலங்கார தேரர் தகனம் செய்யப்பட்டார். இதேபோல் கடந்த ஆண்டு முற்றவெளியில் நாக விகாரையைச் சேர்ந்த பௌத்த துறவி ஒருவரும் தகனம் செய்யப்பட்டார். இச்சம்பவங்கள் தமிழ் மக்களின் மனங்களில் ஆறாத வடுக்களை ஏற்படுத்தியுள்ளன என்று தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் சிங்கள பௌத்த மேலாதிக்க வாதிகளின் கடும்போக்கு கண்டிக்கத் தக்கது என்றும் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை பிரித்தானியர்களின் பிடியிலிருந்து விடுபடுவதற்கு முன்னரே சிங்கள பௌத்த மேலாதிக்கவாதம் தலைதூக்கத் தொடங்கிவிட்டது. நாடு விடுதலை அடைந்த பின்னர், இந்நாட்டின் விடுதலைக்கு முன்னின்று உழைத்த தமிழ் பேசும் சமூகத்தினரை அவமதித்து, அவர்களை அடக்கி ஒடுக்கி, ஒன்றில் அவர்களை தம்முள் கரைந்து போகச் செய்வது, அல்லது அவர்களை இல் லாதொழிப்பது என்ற கடும்போக்கை இலங் கையின் ஆட்சியாளர்கள் அனைவரும் தொடர்ந்தும் கடைப்பிடித்து வந்துள்ளனர்.

சிங்கள பௌத்த மேலாதிக்கவாதத்திற்கு எதிரான குரலை பயங்கரவாதமாகச் சித்திரித்து சர்வதேச ஆதரவுடன் இன்று தமிழ்த் தேசிய இனத்தின் சுயமரியாதைக்கான குரல் கள் அனைத்தும் மௌனிக்கச் செய்யப்பட் டுள்ளன. இந்நிலையில் தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து தமது அடையாளங்களுடன் வாழ்வதற்கும் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி வேண்டியும் தொடர்ந்தும் போரா டும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அழிவின் விளிம்பில் இருக்கும் விலங்குகளைக் காப்பதற்குக்கூட சர்வதேச மட்டத்தில் அமைப்புக்கள் உள்ளன. ஆனால் ஒடுக்கப்பட்ட ஒரு தேசிய இனம் சர்வதேச சட்ட மற்றும் நியமங்களுக்கு அமைய தலை நிமிர்ந்து வாழ்வதை உத்தரவாதப் படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய சர்வதேச அமைப்புகள் ஏதேனும் இருக்கின்றனவாஎன்றசந்தேகம்எழுகின்றது.

தமிழர் தாயகத்திலும் அதற்கு வெளியிலும் தமிழ்த் தேசிய இனத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட தொடர் தாக்குதல்களும் அதற்குப்பின்னரானதமிழர்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும்திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களும், தமிழர்களின் கலாசார வழிபாட்டிடங்களில் திட்டமிட்ட பௌத்த திணிப்புகளும் இந்த நாட்டில் தமிழர்கள் என்ற ஒரு தேசிய இனம் இருந்ததற்கான அடையாளமே இருக்கக்கூடாது என்ற நினைப்பில் சிங்கள பௌத்த மேலாதிக்க வாதம்செயற்படுகின்றதோஎன்றகேள்வியை எழுப்பியுள்ளது. சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட தமிழ் தேசிய இனத்தின்மீதான ஒடுக்குமுறைக்கு எதிரான ஆயுதப் போராட்டம் 2009 மே மாதம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர், தமிழர் தாயகப் பிரதேசத்தில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவு சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் வன்மம் அதிகரித்திருக்கிறது.



இலங்கையில் தனித்தனியாக ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் ஆட்சியின் போதும் சரி, 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசு என்ற பெயரில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் கூட்டாட்சியிலும் சரி தமிழ்த் தேசிய இனம் தொடர்ந்தும் ஒடுக்கப்பட்டே வந்துள்ளது. தமிழ் தேசிய இனத்தின்ஆதரவுடன் ஆட்சிப்பீடம் ஏறிய நல்லாட்சி அரசில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு தமிழ் பிரதேசங்கள் சிங்கள மயமாக்கப்படும் நிகழ்ச்சி நிரல் மும்முரமாக முன்னெடுக்கப்படுகின்றது.

தமிழர் தாயகப் பிரதேசத்தில், அவர்களின் வழிபாட்டிடங்களில், வலிந்து பௌத்த விகாரைகளை நிறுவுவதும், இறந்த பௌத்த துற விகளின் உடல்களை தமிழ் மக்களின் ஆலய வளாகத்தில் எரியூட்டுவதும் அன்றாட நிகழ் வுகளாகிவிட்டன.

இவற்றிற்கெதிரான நீதிமன்ற உத்தரவுகளும்கூட பௌத்த பிக்குகளினால் மதிக்கப்படுவதில்லை. இந்நாட்டின் சட்டங்களும் நீதித்துறையும் தங்களைக் கட்டுப்படுத்தாது என்ற மனோநிலையில் பௌத்தமதத் தலைவர்கள்நடந்துகொள்வதும்அவர்களின் மனோநிலை சரியானதே என்பதுபோல் ஆட்சியாளர்கள் நடந்துகொள்வதும் தமிழ்த் தேசிய இனத்தின் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. அண்மையில் முல்லைத்தீவு மாவட்டம் நீராவியடிப் பிள்ளையார் கோயில் ஆலய பிரதேசத்தில் பௌத்த பிக்குவின் பூத உடல் தகனம் செய்யப்பட்ட முறை எமது அச்சத்தை மேலும் அதிகரித் துள்ளது.

முல்லைத்தீவுசெம்மலைநீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தினுள் அத்துமீறி உட்புகுந்து ஆலயப் பிரதேசத்தில் வலுக்கட்டாயமாகபுத்தர்சிலையை நிறுவி, பௌத்தவிகாரை அமைக்கும் பணியில் கொலம்பே மேதாலங்கார தேரர் ஈடுபட்டிருந்தார். இந்த தேரரின் அடாவடித்தனத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டு அவரது நிர்மாணப் பணி களுக்கு தடையுத்தரவும் பெறப்பட்டிருந்தது. இருப்பினும் மேற்படி தேரர் நீதிமன்றத்தின் உத்தரவைப் புறந்தள்ளி விகாரையை நிர்மாணித்தார். இவர் சில தினங்களுக்கு முன்னர் புற்றுநோய் காரணமாக கொழும்பில் இயற்கை எய்தினார்.

கொழும்பில் மரணித்த கொலம்பே மேதாலங்கார தேரரை முல்லைத்தீவில் நீரா வியடிபிள்ளையார் ஆலய வளாகத்தில் தகனம் செய்ய முடிவெடுத்து பொதுபலசேனாவின் செயலாளர் கலகொடஅத்த ஞானசார தேரர் தலைமையில் மரணித்த தேரரின் பூத உடலுடன் முல்லைத்தீவிற்கு வந்தனர். இவர்களுக்குப் பாதுகாப்பாக முப்படையினரும், பொலிஸாரும் களத்தில் நின்றனர். கிராம மக்கள் ஒன்று திரண்டு எதிர்ப்பு தெரிவித்ததுடன், குறிப்பிட்ட இடத்தில் எத்தகைய நிர்மாணப் பணிகளும் மேற்கொள்வதற்கு நீதிமன்றம் விதித்த தடையுத்தரவையும் காட்டுகின்றனர்.

மேலும் இந்தப் பகுதியில் மேற்கொள்ளவிருக்கும் தகனக் கிரியைக்கு எதிராக மேலும் ஒரு வழக்கை முல்லைத்தீவு நீதி மன்றத்தில் தாக்கல் செய்கின்றனர். நீதிமன்றம் தகனக்கிரியைகளை இந்தப்பகுதியில்மேற்கொள்ளவேண்டாம் என்று இடைக்கால தடை யுத்தரவைப் பிறப் பித்ததுடன், திங்கட்கிழமையன்று தகனம் செய்வதற்கான இடத்தையும் குறிப்பிட்டு தீர்ப்பு வழங்கியது.

இந்தத் தீர்ப்புக்களைக் கவனத்தில் கொள்ளாது, தமிழ் சட்டத்தரணிகளைத் தாக்கி,தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்தி, அவர்களது மத உணர்வுகளை மலினப்படுத்தி, அவர்களது இறை நம்பிக்கையைக் கேள்விக்குள்ளாக்கி, நீதிமன்றத்தை அவமதித்து தேரரின் தகனக்கிரியை தாங்கள் தீர்மானித்த இடத்தில் நடத்தி முடித்திருக்கின்றனர்.

ஏற்கனவே நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் பத்தொன்பது ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஞானசாரதேரர் ஜனாதிபதியினால் பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டு விடுவிக்கப் பட்டிருந்தார். இன்று மீண்டும் அவர் நீதிமன்றத்தை அவமதித்து சக தேரரின் தகனக்கிரியையை நடத்தியுள்ளார். ஐக் கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இன்றைய நீதி அமைச்சர் தலதா அத்துக் கொரல தேரர்கள் சாதாரண நீதிமன்றத்தின் வாசலை மிதிப்பதையிட்டு தான் மிக வும் கவலையடைகிறார் எனத் தெரிவித்திருந்தார். அதாவது தேரர்கள் நீதிமன்றத்தின் வாசலை மிதிப்பதையே ஏற்க முடியாதவராக இருந்தார்.

இந்த நாட் டின் நீதிமன்றத்தையும் தனது துறையை யும் அவமதித்த பிக்குவைத் தண்டிக்க விரும்பாத நீதியமைச்சர், சம்பவத்திற்கு வெட்கித்தலை குனியும் அந்த அமைச்சருக்குத் தலைமைதாங்கும் பிரதமர் ஆகியோரின் செயற்பாட்டை உற்று நோக்குகையில் இந்த நாட்டில் எத்தகைய நிர்வாகம் நடக்கிறது? யார் நிர்வகிக்கிறார்கள் என்ற கேள்விகள் எழுகின்றன.

இப்படிப்பட்ட நிர்வாகத்திற்குத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தகைய நிபந்தனையுமின்றி கடந்த நான்காண்டுகளாக ஆதரவளித்து வருகின்றது. இந்த அரசாங்கம்தான் வடக்கு-கிழக்கில் ஆயிரம் பௌத்த விகாரைகள் அமைப்பதற்கு நிதியொதுக்கீடு செய்தது. அந்த நிதியொதுக்கீட்டிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஆதரவினையும் வழங்கியது. அத்துடன் நில்லாமல் புதிய அரசமைப்பிற்கான இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பௌத்தத்திற்கான முதலிடத்தை தமிழர்கள் எதிர்க்கமாட்டார்கள் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் தமிழ் மக்கள் சார்ந்து கருத்து தெரிவித்தார்.

இன்று அதற்கான விலையை தமிழ் மக்கள் கொடுக்க ஆரம்பித்துள்ளனர். நீதிமன்ற அவமதிப்பை மேற்கொண்டு தான் நினைத்ததை நடத்தி முடித்த ஞான சாரரோ நீதிமன்ற உத்தரவு தாமதமாக வந்ததைக் காரணம் காட்டுகிறார். இறை வன் புகழை மட்டுமே உயர்த்திப் பிடிக்க வேண்டிய துறவி பிறமத கடவுளின் ஆலய வளாகத்தில் அவர்கள் அபச்சாரமா கக் கருதும் விடயத்தை செய்வது நியாய மானதா?தர்மத்திற்குட் பட்டதா? என்பது முதலாவது கேள்வி.

இறைத்தன்மையை மதிக்க வேண்டிய ஒருவர் நீதிமன்றத்தின் உத்தரவு தாமதமாக வந்ததாகக் கூறுவது ஏற்புடையதா? நீதி மன்றத்தின் தீர்ப்பை அவமதித்ததற்காக இலங்கையின் பிரஜையான ஞானசாரர் மீது இலங்கையின் நீதித்துறை எத்த கைய நடவடிக்கையை எடுக்கப்போகிறது? இதற்காக இலங்கை நீதித்துறை ஊழியர்கள் எத்தகைய பங்களிப்பை வழங்கப்போகிறார்கள்?

இலங்கையில்ஐக்கியமும்நல்லிணக்கமும் பேணப்படவேண்டும் என்று கோரி வந்த சர்வதேச சமூகம் ஒன்றைத் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். நாம் நல்லிணக்கத்திற்கும் ஐக்கியத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் அளித்த ஒத் துழைப்பை இலங்கை அரசாங்கம் சரியா கப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. நாம் ஒன்றுபட்டு வாழ விரும்புகிறோம் என்று சொன்னாலும் எம்மை தங்களுடன் சமமா கக் கருதுவதற்கு இலங்கையின் சிங்கள மேலாதிக்க சக்திகள்விரும்பவில்லை.சரிஎங்களுடன் இருக்கப் பிடிக்கவில்லை என்றால் எங்களை எங்கள் போக்கில் விட்டுவிடுங்கள் என்றாலும் சிங்கள ஆதிக்க சக்திகள் விரும்பவில்லை. இந் நிலையில் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று சர்வதேச சமூகமும் இலங்கையின் ஆட்சியாளர்களும் விரும் புகின்றனர்?

ஒட்டுமொத்தத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் எந்தவொரு பிரச்சினைக்கும் இலங்கைக்குள் தீர்வு கிட்டாது என்பதுடன் எமது இனத்தின் பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். எந்தவொரு இராணுவ உத்தியோகத்தரும் சட்டத்தின்முன் நிறுத்தப்பட மாட்டார்கள் என்று இதுவரை கூறிவந்த ஆட்சியாளர்கள் தமிழர் பிர தேசத்தில் சிங்கள பௌத்த மேலாதிக்க வாதிகள் மேற்கொள்ளும் எத்தகைய அடாவடித்தனத்திற்கும் நீதி கிடைக்காது என்பதையும் நிரூபித்திருக்கிறார்கள்.

இத்தகைய சூழலில், அழிவின் விளிம்பிலிருக்கும் தமிழ்த் தேசிய இனத்திற்கு உரிய நீதியையும் பாதுகாப்பையும் வழங்க வேண்டியது சர்வதேசத்தின் கடமையாகும். இந்தக் கடமையை சர்வதேச சமூகம் விரைந்து மேற்கொள்ள வேண் டும் என்பதே எமது வேண்டுகோளாகும் எனக் குறிப்பிட்டார்.

northern PC Park
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
வடக்கின் கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction
Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern Pc Park
0777570124
0773366443
0766999597
0717772377
0215675566
0212229581
0212222050
0212220388

# மெல்பேர்ணில் உணர்வுபூர்வமாக நடைபெற்ற தியாகி திலீபனின் நினைவு வணக்க நிகழ்வு









நீர் கூட அருந்தாது உண்ணா நோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்த தியாகி திலீபனின் 32 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு மெல்பேணில் கிளேன் வேவலி சென் கிறிஸ்தோபர் ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக, உணர்வு பூர்வமாக நினைவு கூரப்பட்டது.

இளைய செயற்பாட்டாளர் செல்வி மது பாலசண்முகன் நிகழ்வை தொகுத்து வழங்க மாலை 6 மணிக்கு நினைவு கூரல் நிகழ்வு ஆரம்பமானது.

ஆஸ்திரேலிய தேசியக் கொடியை இளைய செயற்பாட்டாளர் யது பாலசண்முகன் ஏற்றிவைக்க தமிழீழ தேசிய கொடியை இளைய செயற்பாட்டாளர் பவித்திரன் சிவநாதன் ஏற்றிவைத்தார்.

தியாகதீபம் லெப்ரினன்ற் கேணல் திலீபனின் திருவுருவப் படத்திற்கு தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர் சிவானந்தன் ஈகச்சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தினார். மூத்த தளபதி கேணல் சங்கரின் திருவுருவப் படத்திற்கு தமிழ்த்தேசிய செயற்பாட்டாளர் திலகராஜன் ஈகச்சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தினார். சிறப்புத் தளபதி கேணல் ராயு திருவுருவப்படத்திற்கு தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர் தயாபரன் ஈகச்சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து நிகழ்வுக்கு வருகை தந்த அனைத்து மக்களும் மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர் வணக்கம் செலுத்தினர். அதனைத் தொடர்ந்து அனைவரும் எழுந்து நின்று அகவணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து தியாகதீபம் வணக்க நடனத்தை நடனாலய பள்ளி மாணவி செல்வி ரணா ஜெயரூபன் வழங்கினார். கதிரவனின் கதிராகவும் ஒளிதரும் நிலவாகவும் தியாகத்தின் திருவுருவம் திலீபன் அண்ணா என்ற பாடலுக்கான அந்த நடனம் மிகவும் உணர்வுபூர்வமான தாக அமைந்திருந்தது.

அடுத்து தியாக தீபத்தின் நினைவுகளையும், சமகால அரசியல் நிலைவரங்களையும் உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்ட சிறு காணொலி தொகுப்பு அகலத் திரையில் திரையிடப்பட்டது.

தொடர்ந்து இளம் மாணவி செல்வி அபிதாரணி சந்திரன் தியாகி திலீபன் நினைவு தொடர்பான கவிதை ஒன்றை வழங்கினார். அதனைத் தொடர்ந்து தமிழர் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் வசந்தன் சமகால கருத்துரையை வழங்கினார்.

தொடர்ந்து தியாகதீப நினைவு நாளின் சிறப்பு நிகழ்வாக தாயகப் பாடல்களையும், தியாகி திலீபன் நினைவு சுமந்த பாடல்களை உள்ளடக்கியதான கலை மாலை நிகழ்வு இடம்பெற்றது. இறுதியில் இந் இசைநிகழ்வில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்கள் மூத்த செயற்பாட்டாளர் திருமதி மனோ நவரத்தால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

சமூக அறிவித்தல்கள் வாசிக்கப்பட்ட பின்னர், தேசியக் கொடிகள் இறக்கப்பட்டமையைத் தொடர்ந்து, உறுதியேற்றலுடன் நிகழ்வு 8.05க்கு நிறைவுபெற்றது.

# மல்வத்த பீட மகாநாயக்கர் தமிழர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, செப். 28

முல்லைத்தீவு நீராவியடிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களை அடிப்படையாக வைத்து, மல்வத்த பீட அனுநாயக்கர் திம்புல்கும்புரே ஸ்ரீ சரணங்கர விமலதம்மாபிதான தேரர் தமிழ் மக்களை கடுமையாக எச்சரிக்கை செய்யும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் –

‘புத்தசாசனத்தில் பிக்குமார்கள் என்பவர்கள் மிகவும் கருணையாகவும், அன்பாகவும் பொறுமையாகவும் செயற்படுகின்ற பிரிவினர்களாவர். கருணையின் சாசனம் என்றே இதனை புத்தசாசனம் கூறுகிறது. இப்படிப்பட்டவர்கள் தடிகளில், பொல்லுகளிலும், கத்திகளிலும் தாக்கக் கூடியவர்கள் அல்லர். இவர்கள் மிகவும் சமாதானமாகச் சட்டத்தை மதித்து செயற்படுபவர்களாகிய இவர்களில் யாராவது ஒருவர் மரணமடைந்தால் அவரது புகழுடல் தகனம் செய்யப்படும்.

யாழ்ப்பாணம் குருநகர் விகாரையில் இது இடம்பெற்றது. 2000 ஆண்டுகளுக்கு முன் இந்த விகாரை ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிலையில் தற்போது அந்தப் பகுதியை சிலர் கபளீகரம் செய்து கோவில்களை அமைத்து புராதன இடமாக அந்த தலத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படுகின்றனர். அப்படி செய்து தான் சட்டத்தை எடுத்துக்கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

அப்படியொரு சட்டம் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. வடக்கில் சட்டத்தரணிகள் வீதியில் போராட்டம், சட்டத்தை மீறிய பிக்குகளை கைது செய்ய வலியுறுத்து, தமிழரின் நிலத்தில் சிங்களக் குடியிருப்பு, விகாரைகளுக்கு அனுமதியில்லை, விகாரையானது கோவில் சம்பிரதாயங்களுக்கு பாதிப்பு என்று வடக்கிலுள்ள தமிழ் மக்கள் ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கின்றனர்.

இந்த நாடு, ஸ்ரீலங்கா, வடக்கு என்று புறம்பான நாடு இங்கு இல்லை. சட்டம் அனைவருக்கும் சமமானது. அப்படியிருந்தால் தான் நாடு சட்டரீதியான சிறந்த ஆட்சியை செய்ய முடியும். இந்தச் சட்டத்தை மாற்றியமைத்து அவர்களுக்கு தேவையான வகையில் சட்டத்தை கையிலெடுத்து செயற்படுகின்றனர். திருகோணமலையில் பிக்கு சொரூபமொன்று சேதமாக்கப்பட்டு, கீழே தள்ளிவிடப்பட்டு அழிக்கப்பட்டிருப்பதை பத்திரிகையில் கண்டேன். இப்படி சம்பவங்கள் இடம்பெறுகையில் எமது ஆட்சியாளர்கள் பதிலளிக்காமல் மௌனம் காத்துவருகின்றனர்.

இதனை நாம் பொறுமையாக பார்த்துக் கொண்டிருக்க முடியாது. முன்னரும் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற்றன. ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் இவ்வாறு மௌனம் காத்து வந்தால் சட்டத்தை மக்களே கையிலெடுப் பார்கள். இதுதான் நடக்கும். ஆகவே ஆளுங்கட்சி, முப்படையினர், பொலி ஸார் என்ற வகையில் சரியான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். பௌத்த தேரர்களுக்கு தாக்குதல், இடையூறுகளை ஏற்ப டுத்தும் போது திருப்பியடிக்க மாட் டார்கள்.

ஆனாலும் அமைதிகாக்கும் பௌத்த மக்கள் பொறுமையாக இருக்கமாட்டார்கள். அதனால் இது மிகப்பெரிய அழிவாகவும் கலவரமாகவும் ஆகிவிடும். இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு ஆட்சியாளர்கள் செயற்பட வேண்டும். நான் ஒட்டு மொத்த பிக்குமார்களுக்காகவும் பேசுகின்றேன். மீண்டும் ஒருமுறை இந்த நாட்டை இரத்த ஆறாக மாற்றி விட வேண்டாம்.

கட்டியிருக்கும் நாய்களை அவிழ்த்துவிட்டு ஐயோ கடிக்கிறதே என்று அலறுவதில் அர்த்தமில்லை. ஆகவே புத்திமிக்க யாழ்ப்பாணம் மற்றும் வடக்கு மக்கள் சிந்தித்துப் பாருங்கள். அகிம்சையாக மக்களை குழப்பிவிட்டு மனங்களில் கோபத்தை ஏற்படுத்தி இந்த நாட்டை இரத்தம் சிந்துகின்ற நாடாக மாற்றவா முயற்சிக்கின்றீர்கள்? ஆட்சியாளர்கள் அச்சமின்றி சட்டத்தை அமுல்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் இந்த நாட்டு மக்கள் மறுபடியும் சட்டத்தைக் கையிலெடுத்து விடுவார்கள் – என்று கூறியுள்ளார். (ஐ)



# சுதந்திரமான தேர்தலுக்கு பல்வேறு சவால்கள் உண்டு

## விளக்குகிறார் மஹிந்த தேசப்பிரிய

கொழும்பு, செப். 28

தேர்தல் வன்முறையில் ஈடுபடுவோருக்கு எதிராக உரிய சட்டத்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கலும், தாமதமும்தான் சுதந்திரத் தேர்தலுக்கு சவாலாக உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, தேர்தலுடன் வன்முறையும் ஒன்றித்து போயுள்ளமை, இலங்கையில் இன்று, நேற்று ஏற்பட்ட கலாசாரமல்ல.

1947, 1952, 1956, 1960, 1965, 1970, 1974 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தல்களில் இருந்து தொடர்ந்து வரும் ஒரு தேர்தல் கலாசாரமாகவே இந்த வன்முறை காணப்படுகிறது.

இந்த வன்முறையானது, வாக்குச் சாவடியில் துப்பாக்கிச் சூடு நடத்தும் அளவுக்கும், வாக்குப்பெட்டிகளை கொளுத்தும் அளவுக்கும் சென்றுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.



உண்மையில், இவ்வாறான கலாசாரங்களை தடுக்க இலங்கையில் இன்னும் முறையான சட்டத்திட்டங்கள் இல்லை என்றே கூறவேண்டும்.

இலங்கையிலுள்ள சட்டங்கள், இவ்வாறான குற்றச் செயல்களை தேர்தல் குற்றமாகவும், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய வழக்குத் தாக்கல் செய்யக்கூடிய குற்றமாகவும்தான் கருதுகின்றன.

இதனால், இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக நீதிமன்றின் ஊடாக, தண்டனைக் கிடைப்பதும் குறைவாகவே இருக்கிறது.

அத்தோடு, வாக்குப்பெட்டியை உடைத்த நபருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையே கிடைக்கிறது.

இதனால், வாக்குப்பெட்டியை உடைத்தவர் தண்டனையிலிருந்து தப்பித்து, மீண்டும் தேர்தலில் களமிறங்கி வெற்றிப் பெற்று, அதிகாரத்திற்கும் வரக்கூடிய நிலைமையே இங்கு காணப்படுகிறது

கள்ள வாக்குகளை இடுவோருக்கு எதிராகக்கூட கடுமையான சட்டத்திட்டங்கள் உள்ளன. ஆனால், தேர்தல் வன்முறையில் ஈடுபடுவோருக்கு எதிராக முறையான சட்டத்திட்டங்கள் நாட்டில் இல்லாதிருப்பது மிகவும் பாரதூரமானதொரு விடயமாகும்.

இவை தான் சுதந்திர தேர்தலுக்கு தடையாக இருக்கின்றன. நீதியை நிலைநாட்ட எடுக்கும் காலமும், சட்டத்திட்டங்களை உரியவகையில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கலும்தான் இவற்றுக்கு எல்லாம் காரணமாகும் – என்றார்.

## வல்லரசுகளுடன் நல்லுறவே கோட்டாபயவின் கொள்கை!

### கூறுகின்றார் ரம்புக்வெல

கொழும்பு, செப். 28

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றால், அணி சேரா கொள்கையை கடைப்பிடிப்பார் என்றும், உலகின் அனைத்து வல்லரசுகளுடனும் உறவைப் பேணுவார் என்றும் அவரது பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொழும்பில் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் ஊடகவியலாளர்களிடம் பேசிய கெஹலிய ரம்புக்வெல, பொதுஜன பெரமுன அரசின் கீழ், நாட்டுக்கு நன்மை பயக்காத விடத்து வெளிநாட்டு அரசுகளுடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட மாட்டா எனத் தெரிவித்தார்.



வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தவரை, நாங்கள் அணிசேராமல் இருப்போம். எங்களிடம் ஒரு சிறிய பொருளாதாரம் இருக்கலாம், ஆனால் நாம் சமமாகவும் மரியாதையுடனும் நடத்தப்பட வேண்டியவர்கள். நாங்கள் எல்லா 'வல்லரசுகளுடனும்' மற்றும் எங்கள் எல்லா நண்பர்களுடனும் இணைந்து செயல்படுவோம், மேலும் எந்தவொரு வெளிநாடுகளுடனும் சுயாதீனமாகவும் பரஸ்பர நன்மை பயக்கும் வகையிலும் நாங்கள் கலந்துரையாடத் தயாராக இருப்போம், என்று அவர் கூறினார்.

எந்தவொரு வெளிநாட்டு தேசத்துக்கும் அவர்கள் சரியான காரணத்தை தெரிவிக்காவிட்டால் நாங்கள் எமது கதவுகளை மூடிவிட மாட்டோம்.

நாங்கள் ஒரு புவிசார் அரசியல் சூழலில் வைக்கப்பட்டுள்ளோம் என்பது அறியப்பட்ட உண்மை. இதனால் பல நாடுகள் எம்மீது ஆர்வமாக உள்ளன. அபிவிருத்தி, நிதி மற்றும் அந்நிய நேரடி முதலீடு ஆகியவற்றில் ஆர்வமுள்ள ஒவ்வொருவரிடமும் நாங்கள் பேசுவோம். மற்றொரு கூட்டணியின் மீது நாங்கள் அவர்களை முற்றிலுமாக மூடிவிட மாட்டோம். உண்மையில், எங்கள் வெளியுறவுக் கொள்கை ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கும் - என்றார். (ஐ)

## வடக்கு ஆளுநர் அலுவலகம் முன் கவனவீர்ப்பு



யாழ்ப்பாணம், செப்.28

முல்லைத்தீவு–செம்மலைநீராவியடிபிள்ளையார் ஆலய தீர்த்தக் கேணிக்கு அருகில் பௌத்த பிக்குவின் சடலம் தகனம் செய்யப்பட்டமையை கண்டித்து வடமாகாண ஆளுநர்அலுவலகம் முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

வடக்கு – கிழக்கு சிவில் அமைப்புக்களும் பொதுமக்களும் இணைந்து நேற்றுக் காலை 10 மணியளவில் இந்த கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தியிருந்தனர். இதன்போது அரசே இன அடக்குமுறையை நிறுத்து, அரசே இனங்களுக்கிடையில் பாரபட்சம் காட்டாதே

நீதி ஆள்கிறதா? அநீதி ஆள்கிறதா? என்பனபோன்ற கோஷங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது நீதிமன்றத் தீர்ப்பை மீறியவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் வலியுறுத்தியிருந்தனர்.

போராட்டத்தின் தொடர்ச்சியாக யாழ்.நல்லூர் ஆலய சுற்றாடலில் உள்ள ஐ.நா அலுவலகத்தில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.







# நீராவியடி விவகாரத்தில் ஐ.நா. தலையிடவேண்டும்





முல்லைத்தீவு, செப். 28

நீராவியடி பிள்ளையார் ஆலய விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டுமென வலியுறுத்தி முல்லைத்தீவில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக இந்தப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் பௌத்த மதகுருவின் பூதவுடல், நீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி தகனம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டிருந்தது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளதாவது, சிறுபான்மை இன மக்கள் பெரும்பான்மை இன மக்களால் தொடர்ச்சியாக அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

மேலும் நீதித்துறையின் நீதியை கடைப்பிடிக்கத் தவறியவர்களுக்கு எதிராக இந்த அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்காமல் இழுத்தடித்து வருகின்றது.

எனவே, நீராவியடிப் பிள்ளையார் ஆலய விவகாரத்தில் தவறிழைத்தவர்களுக்கு உரிய தண்டனையை வழங்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையே பணிப்புரை விடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

வடக்கு – கிழக்கு சிவில் சமூக அமைப்புகள் மற்றும் மக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த கவனவீர்ப்பு போராட்டத்தின் இறுதியில், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கு மகஜர் ஒன்று கையளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டு, அந்த மகஜரை கிளிநொச்சியில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையினுடைய காரியாலயத்திற்கு போராட்டத்தை மேற்கொண்ட சிலர் எடுத்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வவுனியாவில் புதையல் தோண்டிய 8 பேர் கைது

வவுனியா, செப். 28

வவுனியா – நெளுக்குளம் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட எட்டு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா, விநாயகபுரம், கண்டி, காலி பகுதிகளை சேர்ந்த 27, 33, 40, 44, 57 வயதுடையவர்களையே நெளுக்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 10மணியளவில் இராசேந்திரகுளம் பகுதியில் புதையல் தோண்டுவதாக நெளுக்குளம் பொலிஸாருக்கு இரகசிய தகவலொன்று கிடைத்துள்ளது.

அதனடிப்படையில் குறித்த பகுதியில் சுற்றிவளைப்பை பொலிஸார் மேற்கொண்டப்போது, இராசேந்திரகுளம் மயானத்திற்கு அண்மித்த பகுதியில் புதையல் தோண்ட தயாராக இருந்த எட்டு பேரை கைது செய்துள்ளனர்.

மேலும் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய மண்வெட்டிகள், அலவாங்கு, பிக்கான், பூஜைபொருள்கள் ஆகியவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் கைது செய்யப்பட்டவர்களை, வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

கிருபா லேணர்ஸ்
கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்
★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.09.2019 இல் வெளியிடப்பெற்றது.